ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி

தொலைபேசி: 91–11–23052205

நிகரி: 91–11–23052219

www.eci.nic.in / www.ecisveep.nic.in

ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

# தேர்தல் பள்ளி (CHUNAV PATHSHALA)

## தகவல் தொகுப்புக் கையேடு

(பொது மக்களுக்கான தேர்தல் கல்வியறிவுக் குழு)



அமைப்பாளர்கள் குறிப்பு





ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

இந்தியத் தேர்தல் ஆணையம்

# தேர்தல் பள்ளி
# (CHUNAV PATHSHALA)

## தகவல் தொகுப்புக் கையேடு

( பொது மக்களுக்கான தேர்தல் கல்வியறிவுக் குழு )



## தேர்தல் பள்ளிப் பாடல்

நாமனைவரும் இந்திய வாக்காளர்.
இந்நாடே எமது பெருமிதம்.
குடியாட்சி எமக்குப் பிடிக்குமே.
அனைவரின்  பெருமை இதுவேதான்!.

வாக்கின் பெருமை உணர்வதே
முதற்கண் நமது கடமையாம்.
இதன்வலிமை, இதன் இயல்பு
நன்றாய் உணர்வோம் நாமெல்லாம்!

வாக்களிப்பது உரிமையே
நிர்ப்பந்தம் ஏதும் கிடையாது.
பதினெட்டு வயது எட்டியதும்,
பதிவேட்டில் பதிவது அவசியமே!

வாக்குச்சாவடி அலுவலரோ,
தேர்தல்நடத்தும் அலுவலரோ
படிவம் ஆறை **(6)** நிரப்பியே
புதிதாய் பெயரைச் சேர்த்திடுவோம்!

படிவம் 7ஐ நிரப்பியே
நீக்கம் செய்ய உதவிடுவோம்!
பெயரில் திருத்தம் செய்திடவே
படிவம் 8ஐ நிரப்பிடுவோம்!
முகவரி மாற்றம் ஒரேதொகுதிக்குள்
படிவம் 8Aவினை நிரப்பிடுவோம்!

தேர்தல் குறித்த தகவல்களை
தினமும் திரட்டிப் பெறுவோமே!
வாக்காளர் பட்டியலில்
நமக்கோர் இடத்தினைப் பெற்றிடுவோம்!
உற்றார் உறவினர் நண்பர்கள்
அனைவருக்கும் இதைஉணர்த்திடுவோம்.
(நாமனைவரும் இந்திய...........)

பேராசை ஏதும் கொள்ளாமல்,
மிரட்டலுக்கும் பணியாமல்,
நெஞ்சை நிமிர்த்திச் சொல்வோம் நாம்,
‘விலைமதிப்பற்ற என் வாக்கு
விற்பனைக்கல்ல, விற்பனைக்கல்ல’.

அள்ளிக்கொடுக்கும் கொடைகளிலே
பாரதத்தின் பெருமைதனைப்
பாரெங்கும் பறைசாற்றும்
வாக்களித்தல் ஒன்றேதான்
நனிசிறந்த கொடையாகும்.
(நாமனைவரும் இந்திய ...........)

**பதிப்பு:**
இந்தியத் தேர்தல் ஆணையம், நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி-110001

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடங்கள், படங்கள், விளக்கங்கள் ஆகியவற்றின் பதிப்புரிமை
இந்தியத் தேர்தல் ஆணையத்தைச் சார்ந்தது.

அமைப்பாளர்கள் குறிப்பு



அமைப்பாளர்கள் குறிப்பு



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தேர்தல் பள்ளி (Chunav Pathsala) – அறிமுகம் | 5 |
| 2. | நோக்கங்கள் | 5 |
| 3. | அமைப்பு | 6 |
| 4. | உறுப்பினர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் | 6 |
| 5. | வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer (BLO)) ஒருங்கிணைப்பு அலுவலராகச் (Nodal Officer) செயல்படுதல் | 7 |
| 6. | ஒருங்கிணைப்பாளர் (Convener) | 7 |
| 7. | இடம் | 8 |
| 8. | பள்ளி நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 9 |
| 9. | செயல்பாடுகள் | 9 |
| 10. | முன் மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை | 9 |
| 11. | தேர்தல் பள்ளிக்கான விளையாட்டு உபகரணங்கள் | 11 |
| 12. | தேர்தல் பள்ளியின் வடிவமைப்பு | 11 |
| 13. | தேர்தல் பள்ளிப் பாடல் | 12 |
| 14. | கூட்டத் தொடர் அமைப்பு (Session Structure) | 13 |
| 15. | மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய மக்களைச் சேர்த்தல் | 14 |
| 16. | வாக்காளர்களின் தோழன் (Matdata Mitra ) | 15 |
| 17. | துவக்க விழா மற்றும் வெளியீடு நிகழ்ச்சி | 15 |
| 18. | கண்காணித்தல் | 17 |
| 19. | சமூக வானொலி | 17 |
| 20. | அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள் | 18 |
| i. | தேர்தல் பத்திரிக்கை (Chunav Patrika) – சுவர் இதழ் | 19 |
| ii. | பட்டியல் தயாரித்தல் (Soochi ki Tayaari) | 22 |
| iii. | தேர்தலை உருவகப்படுத்திய மாதிரி வாக்களிப்பு (Model Matdaan: Election Simulation) | 24 |
| iv. | அட்டை விளையாட்டு – மக்களின் பிரதிநிதியாதல் | 30 |
| v. | கிராம சபைக்கு ஒரு பயணம் (Gram Sabha Ki Yatra ) | 31 |
| vi. | படம் திரையிடுதல் (Nirvachitra) | 33 |
| vii. | வாக்குப்பதிவு இயந்திரம் (Chunav Yantr) & வாக்குச் சாவடி தயார் செய்தல் | 36 |

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| viii. | நோட்டா குறித்து அறிந்து கொள்ளுங்கள் (NOTA ko Janey) | 40 |
| ix. | வாருங்கள் பதிவு செய்யலாம் (Aao Panjikaran Karein) | 42 |
| x. | தேர்தல் கதைகள் (Chunav Ki Kahaniyan) | 46 |
| xi. | சமூகச் செயல்பாடு : பரமபதம் | 47 |
| xii. | சமூகச் செயல்பாடு : வாக்குப்பதிவு இயந்திரம் | 49 |
| xiii. | சமூகச் செயல்பாடு : நாட்டுப்புற நிகழ்ச்சிகள் | 50 |
| 21. | செயல்பாடுகளுக்கான தகவல் தொகுப்புகள். | 53 |









v. வாக்குப் பதிவு இயந்திரத்தில் வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தின் இடது புறத்தில் அவரின் தொடர் எண்ணும் பெயரும், வலது புறத்தில் அவரின் சின்னமும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

### நோட்டா (NOTA)

மாண்பமை உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு மற்றும் ஆணைக்கிணங்க, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் / வாக்குச் சீட்டுகளில் நோட்டா (NOTA) தேர்வுரிமை குறித்து பின்வரும் அறிவுரைகளை இந்தியத் தேர்தல் ஆணையம் வழங்குகிறது :–

i. தேர்தல் களத்தில் போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பாத வாக்காளர்களுக்காக, வாக்குச் சீட்டின் இறுதி வேட்பாளரின் பெயர் மற்றும் விவரங்கள் அடங்கிய பகுதிக்குப் பின்னர், மேற்சொன்ன இறுதிப் பகுதிக்குக் கீழே "None of the Above" என்ற வார்த்தைகளில் எழுதப்பட்டிருக்கும் பகுதி ஒன்று அமைக்கப்பட வேண்டும். வாக்குச் சீட்டில், நோட்டா என்னும் தேர்வுக்கு நேராக அதன் சின்னம் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

ii. இச்சொற்கள் வேட்பாளர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் மொழி மற்றும் அளவுகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

iii. வாக்களிக்கும் இயந்திரத்தில் பதினாறு வேட்பாளர்கள் இருக்கும் நேர்வில், முதல் வாக்குச் சீட்டுப் பகுதியில் "None of the Above" என்னும் தேர்விற்காக கூடுதல் வாக்குப் பதிவுப் பகுதி ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

iv. இவ்வாறு, வாக்களிக்கும் சாதனம் ஒன்றிற்கு மேல் பயன்படுத்தப்படும் நேர்வில், "None of the Above" என்னும் தேர்வு, இறுதியாக இணைக்கப்படுகிற வாக்களிக்கும் சாதனத்தில், இறுதி வேட்பாளருக்கான இடத்திற்குக் கீழே அமைக்கப்பட வேண்டும்.

**ஏனைய தகவல் தொகுப்புகள்**

1. வாக்களிப்பதன் நம்பிக்கை
2. மக்களாட்சியின் பாதுகாவலர்கள்
3. 'மஸ்தி தோஸ்தி மத்தான்–அசைவூட்டுப் படம்
4. அபய் மற்றும் அபா – படப்புத்தகம்
5. பதிவு மற்றும் வாக்களித்தல் குறித்த திருப்புத்தாள் வரைபடங்கள்
6. அடிக்கடி கேட்கப்படும் வினாக்களும் சொற்களஞ்சியமும்.
7. விளையாட்டுச் செயல்பாடுகள்

5. வேட்பாளர்களின் பெயர் வரிசை அமைக்கப்படும்பொழுது மக்களவைத் தொகுதி தேர்தல் குறித்த நேர்வில் தேவநாகிரி வடிவெழுத்துகளிலும், மாநில சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த நேர்வில் தொடர்புடைய மாநிலத்தின் ஆட்சி மொழியிலும் அமைக்கப்பட வேண்டும்.

6. 1961 ஆம் ஆண்டின் தேர்தல் நடத்தும் விதிகளின் 22(3) மற்றும் 30(3)– விதிகளின்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்தால், அவர்களின் பெயர்களுடன் அவருடைய தொழில், தங்குமிடம் அல்லது வேறு வகையில் குறிப்பிட்டு வேறுபடுத்திக்கொள்ளலாம். அதுபோன்ற நிகழ்வுகளில், அந்த வேட்பாளர்களின் பெயர்கள் செல்லத்தக்க வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் மற்றும் வாக்குச் சீட்டில் அதே வகைப்பாட்டின் கீழ் வருமாயின், வேட்பாளர்களின் பெயர்களை ஏதேனும் ஒரு வகையில் வேறுபடுத்திக் காட்டலாம்.

7. வேட்பாளர் ஒருவரின் பெயருடன் எவ்வித அடைமொழி, கல்வி, மரபுவழி, தொழில் அல்லது ஏனைய எவ்வித பெயரையும் சேர்த்து எழுதுவதற்கு யாதொரு தடையும் இல்லை. ஆனால், யாதொரு சூழலிலும், ஏற்கத்தக்க வேட்புமனு செய்த வேட்பாளர்கள் அல்லது போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்களில் அல்லது வாக்குச் சீட்டுகளில் அகர வரிசையில் பெயர்களை நிரல்படுத்துவதற்கு அத்தகைய பெயர் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

### வாக்குப் பதிவு இயந்திரங்களில் வைக்கப்படும் வாக்குச் சீட்டுகள்

i. போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை பதினாறுக்கு (நோட்டாவின் வருகைக்குப் பின்னர் தற்போது பதினைந்து) மிகையாக இருப்பின், வேட்பாளர்களின் எண்ணிக்கை பதினேழு முதல் முப்பத்து இரண்டிற்குள் (தற்போது 31) இருக்கும் நேர்வில் வாக்குச் சீட்டானது பரிந்துரைக்கப்பட்ட அளவில் இரண்டு தாள்களிலும், வேட்பாளர்களின் எண்ணிக்கை முப்பத்து மூன்று முதல் நாற்பத்து எட்டிற்குள் (48) இருக்கும் நேர்வில் மூன்று தாள்களிலும், அவர்களின் எண்ணிக்கை நாற்பத்து ஒன்பதிலிருந்து அறுபத்து மூன்றுக்குள் (63) இருக்கும் நேர்வில் நான்கு தாள்களிலும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

ii. மேற்கூறிய நேர்வுகளில், தொடர் எண் 17 முதல் 32 வரை உள்ள போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் இரண்டாவது தாளிலும், தொடர் எண் 33 முதல் 48 வரை உள்ள பெயர்கள் மூன்றாவது தாளிலும், 49 முதல் உள்ள பெயர்கள் நான்காவது தாளிலும் அச்சிடப்பட வேண்டும். வேட்பாளர்களின் எண்ணிக்கை முப்பத்து இரண்டிற்குக் குறைவாக இருப்பின், இரண்டாம் தாளில், பெயர்ப் பட்டியலுக்குக் கீழ் இடம் வெறுமையாக விடப்பட வேண்டும். வாக்குச் சீட்டுகளின் மூன்றாவது மற்றும் நான்காவது தாள்களுக்கும் அதைப் போல் செய்ய வேண்டும்.

iii. அத்தகைய ஒவ்வொரு தாளிலும், தேர்தலின் விவரங்களைக் குறிப்பிடுவதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தில், தடித்த சொற்கள் மற்றும் எழுத்துகளில் அதன் எண் குறிப்பிடப்பட வேண்டும், எ.கா. ‘தாள் எண். 1’, ‘தாள் எண். 2’ முதலியன.

iv. போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், அவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப் பட்டிருக்கும் அதே மொழியில் அச்சிடப்பட வேண்டும். வேட்பாளரின் தொடர் எண், இந்திய எண்களின் பன்னாட்டு முறையில் குறிப்பிடப்பட வேண்டும்.





## 1. தேர்தல் பள்ளி (Chunav Pathsala) – அறிமுகம்

அரசியல் சார்பற்ற, நடுநிலையான மற்றும் பாகுபாடற்ற முறையில், இந்தியக் குடிமக்களின் அனைத்து வயதினரும் உற்சாகத்துடன் பங்கேற்று, செய்முறைப்பயிற்சி அனுபவம் வாயிலாக தேர்தல் குறித்த அறிவைப் பெறும்பொருட்டு தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள்(Electoral Literary Clubs (ELCs)), நம் நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. முறையான கல்விக் கட்டமைப்புகளைச் சேராத மக்களுக்கு, தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் தேர்தல் பள்ளி (**Chunav Pathsala**) என்ற பெயரில் வாக்குச்சாவடிகளில் அமைக்கப்படும்.

கிராமத்தின் / சமூகத்தின் அனைத்து மக்களும் அணுகத்தக்க வகையில் வாக்குச் சாவடிகளில் தேர்தல் பள்ளியானது அமைக்கப்பட வேண்டும். பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்கள் மீது குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்படும் வகையில், தேர்தல் பள்ளி கிராம மக்களின் ஒருங்கிணைந்த பிரதிநிதித்துவத்தை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இவ்வமைப்பில் பல வயதினரும் கலந்துள்ளதால் பள்ளியின் உறுப்பினர்கள் கலந்து கொள்வதும், நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும் எளிமையாக உள்ளன என்பதை உறுதி செய்ய வேண்டும். இத்தகு நிலை நகர் பகுதிகளுக்கும் பொருந்தும்.

தேர்தல் பள்ளி எவ்வாறு அமைப்பது, அதன் பங்கேற்பாளர்கள் யார், ஒருங்கிணைப்பாளர், எங்கு, எப்படி அது நடத்தப்படும் மற்றும் என்னென்ன நடவடிக்கைகள் இதில் அடங்கும் என்பன பற்றி பின்வரும் பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளது.

## 2. நோக்கங்கள்

i) மக்களுக்கு தேர்தல் குறித்த கல்வியறிவைப் புகட்டும் விதமாக, அதாவது வாக்காளராகப் பதிவு செய்தல், தேர்தல் செயல்முறை மற்றும் தொடர்புடைய பொருண்மைகள் குறித்த செய்முறைப் பயிற்சியை அனுபவம் மிக்கவர்களின் வாயிலாகக் கற்பித்தல் ;

ii) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியைக் (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) குறித்து பழக்கப்படுத்துதல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் உறுதித்தன்மை, அதன் மீதான நம்பகத்தன்மை குறித்த விழிப்புணர்வூட்டல்;

iii) தாம் அளிக்கவிருக்கும் வாக்குகளின் வலிமையைப் புரிந்துகொள்வதிலும், வாக்குரிமையை நம்பிக்கையுடனும், வசதியாகவும், நேர்மையான முறையிலும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலும் இலக்கிடப்பட்ட மக்களுக்கு, அதாவது வருங்கால வாக்காளர்களுக்கு உதவுதல்;

iv) உறுப்பினர்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி, தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் தேர்தல் குறித்த அறிவை மக்களிடம் கொண்டு செல்லுதல்;

v) இதுவரை பதிவு செய்யாத தகுதியுள்ள உறுப்பினர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்ய வகைசெய்தல்.

vi) தேர்தல் குறித்த பணிகளில் தங்களின் பங்களிப்பை மேம்படுத்தவும், தெளிவான மற்றும் நேர்மையான வாக்களிப்பு என்னும் பண்பை அதிகரிக்கவும், ‘ஒவ்வொரு வாக்கும்



முக்கியத்துவம் வாய்ந்தது' மற்றும் 'ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது' என்னும் கொள்கையைப் பின்பற்றவும் பொதுமக்களுக்கு உதவுதல்.

### 3. அமைப்பு

தேர்தல் பள்ளியானது வாக்குச்சாவடி நிலை அலுவலரால் (Booth Level Officer (BLO) வாக்குச் சாவடியின் பெயரால் அழைக்கப்படும். தேர்தல் பள்ளியைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், இதில் பங்குபெறுவதற்காக மக்களுக்கு அழைப்பு விடுப்பதும், இதன் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நிலையான இடத்தை ஏற்பாடு செய்வதும், வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பொறுப்பாகும்.

### 4. உறுப்பினர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள்

தேர்தல் பள்ளி அனைவருக்கும் அணுகத்தக்க வகையில் இருக்க வேண்டும். எனினும், இது பின்வரும் குழுக்களை தேர்தல் பள்ளியின் உறுப்பினர்களாக்கும் இலக்குகளைக் கொண்டிருக்க வேண்டும்:–

- 14லிருந்து 17 வயதிற்குட்பட்ட பள்ளிப்படிப்பை இடையே நிறுத்திய வருங்கால வாக்காளர்கள்.
- 18லிருந்து 19 வயதுடைய புதிய வாக்காளர்கள்
- கிராமத்துப் பெண்கள் (இளம் மற்றும் நடுத்தர வயதுடையோர்)
- மூத்த குடிமக்கள்
- மாற்றுத் திறனாளிகள் (எவரேனும் இருப்பின்).







### வாக்குச்சீட்டு மற்றும் நோட்டாவைப் பற்றிய முக்கிய குறிப்புகள்:

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் உள்ள அதே வரிசைப்படியே வாக்குச் சீட்டிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் அமைக்கப்பட்டிருக்கும்.


### தேர்தல் நடத்தும் அலுவலரின் கையேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி:

**செல்லத்தக்க வேட்புமனுக்களை தாக்கல் செய்த வேட்பாளர்களின் பெயர்களை அகர வரிசைப்படி ஒழுங்கமைத்தல்**

1. 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ ச் சட்டத்தின் பிரிவு 38 மற்றும் படிவம் 4 (செல்லத்தக்க வேட்புமனுக்களை தாக்கல் செய்த வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்) மற்றும் படிவம் 7ஏ (தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல்) ஆகியவற்றின்படி, வேட்பாளர்களின் பெயர்கள் மூன்று வகைப்பாட்டின்கீழ் அமைக்கப்படவுள்ளன. அவை வருமாறு.
   - அ) தேர்தல் நடைபெறும் மாநிலத்திலுள்ள தேசியக் கட்சி மற்றும் மாநிலக் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள்
   - ஆ) பதிவு பெற்ற அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும்
   - இ) ஏனைய (சுயேட்சை) வேட்பாளர்கள்.
2. எனவே, வேட்பாளர்களின் பெயர்கள் மேற்சொன்ன பட்டியலில் அமைந்துள்ள அதே வரிசையில் வாக்குச்சீட்டில் அமைத்திட வேண்டும் (அத்தியாயம் 5–ல் விவரிக்கப்பட்ட முறையில்). மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வகைப்பாடுகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக அகர வரிசைப்படி பெயர்கள் அமைக்கப்பட வேண்டும்.

   ( எனினும் படிவங்கள் 4 மற்றும் 7ஏ ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தலைப்புகள் மேலே குறிப்பிட்ட மூன்று வகைப்பாடுகளிலும் வாக்குச் சீட்டுகளில் இடம் பெறக்கூடாது. )
3. வேட்பாளர்களின் பெயர் முறையாக உள்ளதா அல்லது குடும்பப்பெயர் அளிக்கப்பட்டுள்ளதா ? என்பதைப் பொருட்படுத்தாமல் அவரது பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையில், 3 பட்டியலிலும் அதாவது, செல்லத்தக்க, வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்களின் பட்டியல், (படிவம் 4) தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர்களின் பட்டியல் (படிவம் 7A) மற்றும் வாக்குச்சீட்டுகள் ஆகிய 3 வகைப்பாடுகளிலும் வேட்பாளர்களின் பெயர்கள் அகர வரிசைப்படி அமைக்கப்படுவதை நீங்கள் தீர்மானிப்பீர்கள். வேட்பாளரின் பெயருக்கு முன்னால் தலைப்பெழுத்துகள் ஏதேனும் இருப்பின், மேற்சொன்ன செயல்நோக்கத்திற்காக, பொருட்படுத்த வேண்டாம். எடுத்துக்காட்டாக, வேட்பாளரின் பெயர் T.K.Reddy என்றிருந்தால் அவரது பெயரின் முதல் எழுத்தான 'R' என்ற எழுத்தின்படி தீர்மானிக்கப்படுமேயன்றி, 'T' என்ற எழுத்து அல்ல.
4. எனினும், இரண்டு வேட்பாளர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்து வெவ்வேறு தலைப்பெழுத்துகள் இருப்பின், எடுத்துக்காட்டாக P.S.Reddy மற்றும் T.K.Reddy என்றிருந்தால் தலைப்பெழுத்துகளின் முதலெழுத்து அடிப்படையில், அமைத்துக் கொள்ளப்படும். மேலும், இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்து வெவ்வேறு குடும்பப் பெயர்கள் இருப்பின், அவர்களது பெயர்கள், குடும்பப் பெயர்களின் அடிப்படையில், அகர வரிசைப்படி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## மாதிரி வாக்குச் சீட்டு






- பள்ளியில் சேராத 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள்.
- அப்பகுதியில் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்த வேறு பிரிவினர் (எ.கா. பழங்குடியினர்)

அரசியல் சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் மட்டுமின்றி வாக்குச்சாவடி விழிப்புணர்வு குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களின் உதவியுடன் உறுப்பினர் பதிவு மேற்கொள்ளப்படும். ஆசிரியர்கள், தேசியக் கல்வியறிவுத் திட்டத்தின்கீழ் (National Literacy Mission(NLM)) செயல்படும் அலுவலர்கள், பஞ்சாயத்து அலுவலர்கள் அல்லது நகராட்சி அலுவலர்கள் (தேர்தல் பதவியல்லாதவர்கள்) போன்றோரில் தன்னார்வத்துடன் பணிபுரியும் அலுவலருடன் இணைந்து பெயர் பதிவுப் பணிகளை மேற்கொள்ளலாம்.

ஒருங்கிணைப்பாளரின் உதவியுடன் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLO) உறுப்பினர் பதிவேட்டை பராமரிக்க வேண்டும். உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு (DEO) காலாண்டு அறிக்கையை அவர் அனுப்புவார். ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் ஒருங்கிணைப்பாளரும் வாக்குச்சாவடி நிலை அலுவலரும் நாளது வரை உறுப்பினரைச் சேர்த்த பதிவேட்டில் கையொப்பமிட வேண்டும்.

### 5. வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer (BLO)) ஒருங்கிணைப்பு அலுவலராகச் செயல்படுதல்(Nodal Officer)

அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLO) அப்பகுதியின் தேர்தல் கல்வியறிவுக் குழுக்களுக்கு ஒருங்கிணைப்பு அலுவலராகச் செயல்படுவார். வாக்குச்சாவடி விழிப்புணர்வுக் குழு (Booth Awareness Group) தேர்தல் கல்வியறிவுக் குழுவிற்கு வழிகாட்டி, ஆதரவு அளிப்பதுடன், உறுப்பினர்கள் பெயர் பதிவு மற்றும் குழு செயல்பாடுகளை உருவாக்குவதில் வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கு உதவி புரிய வேண்டும்.

### 6. ஒருங்கிணைப்பாளர்

பொதுமக்களிடையே, தேர்தல் கல்வியறிவுக் குழுவின் ஒருங்கிணைப்பாளரை வாக்குச் சாவடி நிலை அலுவலர் (BLO) அடையாளங் கண்டறிய வேண்டும். ஒருங்கிணைப்பாளர் படித்தவராக இருத்தல் வேண்டும். தன்னார்வத்துடன் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் தேசியக் கல்வியறிவு ஆணையத்தின் (**National Literacy Mission Authority** (**NLMA**)) கீழ் பணிபுரியும் ஊக்கமளிப்போருக்கு (Preraks) முன்னுரிமை அளிக்கப்படலாம். மாற்றுத்தேர்வாக, வாக்குச்சாவடி விழிப்புணர்வுக் குழு அல்லது நாட்டு நலப்பணித் திட்டம், நேரு யுவ கேந்திர சங்கதன் மற்றும் குறிப்பிடத்தக்க அரசு சாரா நிறுவனங்களின் இளம் உறுப்பினர்களை ஒருங்கிணைப்பாளராகத் தெரிவு செய்யலாம். அவர்கள் முதன்மைப் பயிற்றுனரால் பயிற்றுவிக்கப்படுவர். கிராமப்புறங்களில் தேர்தல் கல்வியறிவுக் குழுக்களை அமைப்பதற்கு முன்னர், ஒருங்கிணைப்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு பயிற்சியளிப்பதே முக்கியமான பணி ஆகும்.

தேர்தல் பள்ளிகளில், வாக்குச்சாவடி நிலை அலுவலரே ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றலாம். இப்பள்ளியின் ஒருங்கிணைப்பாளராக வாக்குச்சாவடி நிலை அலுவலர் அல்லது தன்னார்வலரை நியமிப்பது குறித்து மாநில அரசே முடிவு செய்யலாம்.

இப்பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் "வாக்காளர் பயிற்சியாளர்" (Matdata Prashishak) என அழைக்கப்படுவார். இப்பள்ளியின் அனைத்து செயல்பாடுகளையும் நன்கு கற்று, அதனை மிகச் சிறந்த வகையில் செயல்படுத்துவதே பயிற்சியாளரின் கடமையாகும். இதற்கு ஒருங்கிணைப்பாளரின் இன்றியமையா முயற்சியும் முன்னேற்பாடும் அவசியமாகும். இவர், வாக்குச்சாவடி நிலை அலுவலரின் உதவியுடன், பொது மக்களின் சிக்கல்களையும் குறைகளையும் கண்டறிந்து, அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து தங்களது சொந்த கருத்துகளுடன், பங்கேற்பாளர்களின் கருத்தையும் ஆலோசனையையும் தெரிவிப்பதற்கான தொடர்பாளராகச் செயல்படுவார்.

வாக்காளர் பெயர் பதிவு, வாக்காளர் பட்டியல் மற்றும் தேர்தல் நடைமுறை குறித்த தெளிவான அறிவை / தகவலை, இவர் கொண்டிருக்க / பெற்றிருக்க வேண்டும்.

## 7. இடம்

தேர்தல் பள்ளியை நடத்துவதற்கு, ஏற்ற இடத்தைக் கண்டறிவதே வாக்குச்சாவடி நிலை அலுவலரின் முக்கியமான கடமையாகும். பெரும்பாலும், கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற அல்லது சட்டமன்றத் தேர்தல் வாக்குச்சாவடி அமைவிடம் அல்லது வாக்குச்சாவடி நிலை அலுவலரால் கண்டறியப்பட்ட இடமே தேர்தல் பள்ளியை நடத்துவதற்கான இடமாக இருக்கும். பெருமளவிலான பங்கேற்பாளர்கள் அமரக்கூடிய திறந்தவெளி மைதானத்தில் தேர்தல் பள்ளி நடத்தப்படலாம். பங்கேற்பாளர்கள் எளிதாக வந்தடையக்கூடிய வகையிலும் மக்களுக்கு நன்கு தெரிந்த இடமாகவும் தேர்தல் பள்ளி அமைவிடம் இருக்க வேண்டும்.







### தேர்தல் இயந்திரம் : உங்கள் வாக்குச் சீட்டினைத் தயாரிப்பீர் (மாதிரி சின்னங்கள்)

| அரசியல் கட்சி / சுயேட்சை | சின்னங்கள் |
|---|---|
| தேசியக் கட்சிகள்<br>(அங்கீகாரம் பெற்றவை)<br>5 | க<br>ங<br>ச<br>ஞ<br>ட |
| மாநிலக் கட்சிகள்<br>(அங்கீகாரம் பெற்றவை)<br>4 | ண<br>த<br>ந<br>ப |
| கட்சிகள் (பதிவு செய்யப் பெற்றவை)<br>3 | ம<br>ய<br>ர |
| சுயேட்சை வேட்பாளர்கள்<br>3 | ல<br>வ<br>ழ |

<table>
<tr><td>கூழாங்கற்கள்<br></td><td>நாற்காலி<br></td></tr>
<tr><td colspan="2">இவற்றுள் எவை<br>உண்பதற்கான பொருள் ?</td></tr>
<tr><td>இறகுகள்<br></td><td>நோட்டா<br></td></tr>
</table>

<table>
<tr><td>வாழைப்பழம்<br></td><td>பாதுகாப்பு ஊசி<br>(Safety Pin)<br></td></tr>
<tr><td colspan="2">இவற்றுள் எவை சிறுசெடியை நடுவதற்காக<br>குழி தோண்ட உதவும் ?</td></tr>
<tr><td>மருத்துவ ஊசி<br></td><td>நோட்டா<br></td></tr>
</table>





வாக்குச்சாவடி தவிர தேர்தல் பள்ளிக்கான மாற்று அமைவிடம் பின்வருமாறு:

- கிராம சபைக் கூட்டத் திடல்கள்
- பள்ளிக் கட்டட ஆடுகளங்கள்
- அங்கன்வாடி மையங்கள்

தேர்தல் பள்ளி நடத்துவதற்கான இடத்தை அமைத்த பின்னர், தேர்தல் பள்ளி நடைபெறும் கூட்டம், நேரம் குறித்த அறிவிப்பைச் செய்வதற்கான ஏற்பாட்டை, கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் வாக்குச் சாவடி அளவிலான அலுவலர் செய்ய வேண்டும்.

## 8. பள்ளி நடைபெறும் நாள் மற்றும் நேரம்

இருமாதத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு முதல் சனிக்கிழமை நாளில் மதியம் 2 மணி முதல் 4 மணிவரை தேர்தல் பள்ளி நடைபெறும். மாறாக, ஏதேனும் காரணத்தால், குறிப்பிட்ட கிராமத்திற்கு அந்நேரம் ஏற்றதாக இல்லையென வாக்குச்சாவடி நிலை அலுவலர் கருதுவாரெனில், பள்ளி கூட்டப்படுவதற்கான உரிய நாள் மற்றும் நேரத்தை அவர் பரிந்துரைக்கலாம். எனினும், நிலையான இடம் மற்றும் நேரத்தைப் பின்பற்றுவது, தொடர்ச்சியான நிகழ்வுகளுக்கு வகை செய்வதோடு, வருகை புரிந்தவர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து பங்கேற்பாளர்கள் முறையாக வகுப்புகளில் கலந்து கொள்ள உதவுகிறது. உறுப்பினர்கள் அவர்களது பங்கேற்பை முன்னதாகவே திட்டமிடுவதற்கும் இது உதவும்.

இத்தகு நடவடிக்கைகளால், பட்டியலிடப்படும் செயல்கள் பள்ளி உறுப்பினர்களால் சுவர் இதழ் தயாரித்தலுக்குப் பயன்படும். ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையும் இவை மேற்கொள்ளப்படலாம்.

## 9. செயல்பாடுகள்

ஒரு மாதம் விட்டு ஒரு மாதம் ஒவ்வொரு முதல் சனிக்கிழமையும் தேர்தல் பள்ளி கூடி, தேர்தல்கள், தேர்தல் நடைமுறையில் பங்கேற்றல் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுகள் நடத்தப்படும். ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையும், சுவர் இதழை நாளது வரையாக்குவதற்காக ஒதுக்கப்படும்.

ஒரு மாதம் விட்டு ஒரு மாதம் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகள் நடைபெறும் 7 பள்ளிகளில், பெருமளவிலான மக்கள் பங்கேற்கும் வகையில், கூடுதலாக 3 நடவடிக்கைகள் நடத்தப்படும். 2 தகவல் சார்ந்த ஒவ்வொரு நடவடிக்கைக்குப் பின்னர், பெருமளவிலான மக்களைப் பங்கேற்க வைப்பதற்காக, ஒரு நடவடிக்கை பின்பற்றப்படும். இதனால் வாக்காளர் கல்வியைப் புகட்டுவதில், உறுப்பினர்கள் தாமாகவே முன்வந்து பங்கேற்பாளர்களாகச் செயல்படுவர்.

## 10. முன்மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை

தேர்தல் பள்ளிகளில், மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமையில் நடைபெற வேண்டிய செயல்பாடுகளின் அட்டவணையை அடுத்த பக்கத்தில் காணலாம். முதல் இரண்டு வகுப்புகளைத் தவிர ஒருங்கிணைப்பாளர் அவரது விருப்பப்படி வகுப்புகளை மறு அட்டவணையிடுவதற்கு



சுதந்திரமுண்டு. எடுத்துக்காட்டாக, கிராம சபை தொடர்பான செயல்பாடானது, கிராம சபை நடைபெறும் நாளிலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திர செயல்பாடானது, தேர்தல்கள் நடைபெறும் பொழுதும் நடத்தப்பட வேண்டும்.

அனைத்து செயல்பாடுகளும் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். கிடைக்கப் பெறும் நேரத்தைப் பொறுத்து செயல்பாடுகளைப் பின்வருமாறு அட்டவணையிடலாம்.

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் I | செயல்பாடு | நிகழ்வுகளைத் தயாரித்தல் அதனைத் தொடர்ந்து பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் குறித்த அட்டை விளையாட்டு (Soochi ki Tayaari followed by Game–Matdaan ke Padav) |
| கூட்டத்தொடர் II | செயல்பாடு | தேர்தலை உருவகப்படுத்திய மாதிரி வாக்களிப்பு (Model Matdaan : Election Simulation ) |
| கூட்டத்தொடர் III | செயல்பாடு | அட்டை விளையாட்டு அதனைத் தொடர்ந்து கிராம சபையைப் பார்வையிடுதல் |
| கூட்டத்தொடர் IV | சமுதாயச் செயல்பாடு | திரைப்படம் திரையிடுதல் அதனைத் தொடர்ந்து நெறிமுறைக்குட்பட்ட வாக்களிப்பு குறித்த பரமபத விளையாட்டு மற்றும் ரங்கோலி கோலமிடுதல் |
| கூட்டத்தொடர் V | செயல்பாடு | திரைப்படம் திரையிடுதல் அதனைத் தொடர்ந்து விளையாட்டு (Varanawal) |
| கூட்டத்தொடர் VI | செயல்பாடு | வாக்குப் பதிவு இயந்திரம் – உங்கள் வாக்குச் சீட்டினை உருவாக்குங்கள்; நோட்டா குறித்து அறிந்து கொள்ளுங்கள் (NOTA ko Janey) |
| கூட்டத்தொடர் VII | சமுதாயச் செயல்பாடு | வாக்குப் பதிவு இயந்திரம் – மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி குறித்த வாக்காளர் வினாடி வினா |
| கூட்டத்தொடர் VIII | செயல்பாடு | வாருங்கள் பதிவு செய்யலாம் (Aao Panjikaran Karein) |
| கூட்டத்தொடர் IX | செயல்பாடு | தேர்தல் கதைகள் (Chunav Ki Kahaniyan) |
| கூட்டத்தொடர் X | சமுதாயச் செயல்பாடு | கிராமச் சந்தை அல்லது திருவிழாவின் போது நாட்டுப்புறக் கலைகள் வாயிலாகக் கதை சொல்லி அறியச்செய்தல். |





## மாதிரி வாக்குச்சீட்டு

### நோட்டாவைத் தெரிந்து கொள்ளுங்கள்- ஒளிரும் அட்டைகள்

| தரை விரிப்பு | பீப்பாய் |
|---|---|
|  |  |
| இவற்றுள் எவை போக்குவரத்து வாகனமாகப் பயன்படும் ? | |
| கோழி | நோட்டா |
|  |  |

| குதுப்மினார் | தாஜ்மஹால் |
|---|---|
|  |  |
| இவற்றுள் எவை இந்தியச் சின்னம் அல்ல ? | |
| செங்கோட்டை | நோட்டா |
|  |  |

## ஒரு தந்தையின் அர்ப்பணிப்பு

வெர்வெக் என்பது மிசோரம் மாநிலத்தில் ஐஸ்வால் மாவட்டத்தில் உள்ள சிறுகிராமம். 2008ஆம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் நண்பகல் பொழுதில் வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் தேர்தல் பணிக் குழுவினர் அனைவரும் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்தக் கிராமத்திலுள்ள அனைத்து வாக்காளர்களும் கிட்டத்தட்ட தங்கள் வாக்குகளைப் பதிவு செய்திருந்தார்கள். வாக்குப்பதிவு அலுவலர் தண்டோரா போடும் பணியாளரை அழைத்து, கிராமத்தில் யாரேனும் வாக்குப்பதிவு செய்யாமலிருந்தால் வாக்குப் பதிவு நேரம் முடிவடைவதற்குள் வந்து வாக்களிக்க வேண்டும் என்று ஊர் மக்களிடையே அறிவிக்கச் சொன்னார். பிற்பகல் 2 மணி அளவில் தண்டோரா போடுபவர் வாக்குப்பதிவு அலுவலரிடம் ஓடிவந்து கிராமத்தில் ஒரே ஒரு நபர் மட்டும், கடந்த மூன்று நாட்களாக உடல்நிலை சரியில்லாத மகளுக்காக மருந்து வாங்க அருகிலுள்ள கிராமத்தில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்றிருப்பதாகவும், அவர் மட்டுமே வாக்களிக்கவில்லை என்றும் கூறினார்.

அவருக்காக நாம் காத்திருக்க வேண்டும் என்றும், அந்த நபர் கண்டிப்பாகத் திரும்பி வந்து வாக்களிப்பேன் என்று கூறிச் சென்றதாகவும் வாக்குப்பதிவு அலுவலர் சொன்னார். தேர்தல் பணிக் குழுவினர் அந்த ஒரு நபருக்காக காத்திருந்தனர். அது நவம்பர் மாதம் என்பதால் பகல்பொழுது குறைவாக இருந்தது. மாலை 4 மணிக்கு வாக்களிக்கும் நேரம் முடிவடைய இருந்ததால் தேர்தல் அலுவலர் அந்த நபர் வரமாட்டாரோ எனக் கவலையுற்றார். அவரைத் தொடர்பு கொள்ளவும் வழி இல்லை.

அந்த நிலையில் நான்கு மணி அடிப்பதற்கு ஒரு சில நிமிடங்கள் இருக்கும்பொழுது அந்த நபர் வேகமாக வந்து நேரடியாக வாக்குப்பதிவு மையத்திற்குச் சென்றார். அவர் கையிலிருந்த மருந்துகளை வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாங்கி ஒரு உதவியாளர் மூலம் அந்த நபரின் வீட்டில் கொண்டுபோய் சேர்க்கச் சொன்னார். வாக்களிக்கும் நேரம் முடிவடைந்தபோது மிகுந்த மகிழ்வுடன் ஒருவரை ஒருவர் கைகுலுக்கி 100 சதவீதம் வாக்குப்பதிவு நடந்ததாக தேர்தல் பணிக்குழுவினர் மகிழ்வுடன் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டனர்.





## 11. தேர்தல் பள்ளியின் விளையாட்டு உபகரணங்கள்:

ஒருங்கிணைப்பாளரிடம் வழங்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்களுள் 5 விளையாட்டுகள் குழு விளையாட்டாகவும், 2 விளையாட்டுகள் கதைத் தொடர்களாகவும் இருக்கும். இந்த விளையாட்டு உபகரணங்களில் கொடுக்கப்பட்டுள்ள சில விளையாட்டுகள் இவ்வழிகாட்டிப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி சில தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளையொட்டி விளையாடப்பட வேண்டும். சில முக்கியமான தகவல் மற்றும் கருத்துகளை மீண்டும்வலியுறுத்தல்மற்றும்வலுவூட்டும்விதமாகஇதன்நோக்கம்அமைந்திருக்கும்.மேற்கூறியுள்ள 5 விளையாட்டுகளும் அவற்றுக்கான அறிவுரைகளுடன் வழங்கப்பட்டிருக்கும்.

இவ்விளையாட்டு உபகரணத்தில் கொடுக்கப்பட்டுள்ள விளையாட்டுகள் கீழ்க்கண்ட தகவலை வெளிப்படுத்துகின்றன:

| | | |
|---|---|---|
| Stapoo (நொண்டி விளையாடுதல்) | – | வாக்களிப்பின் படிநிலைகள் |
| Snakes and Ladders (பரம பதம்) | – | தேர்தல் நடைமுறையினை விவரித்தல் |
| Maze game (புதிர் விளையாட்டு) | – | தேர்தல் நடைமுறைகளில் பின்பற்றப்படும் |
| Ludo (தாயம்) | – | அணுகத்தகுந்த தேர்தல் |
| Election Tambola | – | தேர்தல் லாட்டரி |

தேர்தல் பள்ளியின் ஒரு செயல்பாடான படம் திரையிடுதல் நிகழ்ச்சி நடைபெற இயலாத போது இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள தேர்தல் நடைமுறை குறித்த 2 கதைத் தொடர்களை உபயோகிக்கலாம்.


## 12. தேர்தல் பள்ளியின் வடிவமைப்பு

தேர்தல் பள்ளி என்பது திருவிழா மற்றும் வண்ணமயமான மனநிலையை ஏற்படுத்துகிற வகுப்பறையாக இருக்கும். எந்தளவிற்கு சாத்தியமோ, அந்த அளவில் பின்வரும் கூறுகள் இப்பள்ளியின் பகுதியாக இருக்கும்:

- இத்தேர்தல் பள்ளியின் அமர்வு, பாடலுடன் தொடங்கி, செய்தித் துணுக்குகளுடன் முடிவடையும்.
- வாக்காளர் கல்வியுடன் தொடர்புடைய தகவல் மற்றும் ஊக்கமூட்டும் செய்திகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பிரச்சார சுவரொட்டி மற்றும் புகைப்படக் கண்காட்சிகளுடன் கூடிய அறையில் இந்தப் பள்ளி இயங்கும்.
- இப்பள்ளியின் கரும்பலகை ஒரு சிறப்புமிக்க அம்சமாகும். ஒவ்வொரு கூட்டத்தொடரின் போதும், தேர்தல் / வாக்களிப்பது தொடர்பான நேர்மையான எண்ணங்கள் / கருத்துகள் கரும்பலகையின் மேற்பகுதியில் எழுதப்பட்டிருக்கும். கரும்பலகையின் கீழ்ப்பகுதியில் உதவி எண்கள் ( மாவட்டத் தொடர்பு மையம் / தேசிய தொடர்பு மையம் / மாவட்ட உதவி எண்கள் ) ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.








- பிரசுரங்கள், கையேடுகள், வாக்காளர் வழிகாட்டிகள், வாக்காளர் புத்தகங்கள், தேர்தல் தொடர்பான விளையாட்டுப் பெட்டகம், (Vote Baazi) புத்தகங்கள் வைக்கக்கூடிய வகையில் வாக்காளர் நூலகம் / தகவலுக்கான மையம் அமைக்கப்படும்.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு தேர்தல் விழிப்புணர்வுப் பாடலுடன் மாநில அளவில் தயாரிக்கப்பட்ட (SVEEP) முறைப்படுத்தப்பட்ட வாக்காளர்கள் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு தொடர்பான பாடல்கள், வகுப்பு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னரும் வகுப்பு முடிவடைந்த பிறகு 15 நிமிடங்களும் ஒலிபெருக்கி மூலம் இசைக்கப்பட வேண்டும்.

## 13. தேர்தல் பள்ளிப் பாடல்

தேர்தல் பங்கேற்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் உள்ளூர் மொழியில் 4லிருந்து 6 வாக்கியங்களைக் கொண்ட பாடல், தேர்தல் பள்ளியில் பாடப்படும். அந்தப் பாடல், தேர்தல் பள்ளித் தொடக்க விழாவில், போட்டி ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படலாம் மற்றும் பள்ளியின் நோக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அதில் திருத்தம் செய்யலாம். இப்பாடல் கீழ்க்கண்ட தகவல்களைப் பெற்றிருக்க வேண்டும். (i) வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்வதன் முக்கியத்துவம், (ii) வாக்களிப்பின் முக்கியத்துவம், (iii) நேர்மையான மற்றும் தெளிவான தேர்தல் நடைமுறைப் பங்கேற்பு.





இழுத்தும், பல இடங்களில் தள்ளிக் கொண்டும் சென்றோம். வாக்குப் பதிவு நாளன்று நடைபேசி (Walkie-Talkie)யில் மிகக் குறைந்த அளவு சமிக்ஞை (Signal) மட்டுமே கிடைத்தது. எங்களுடன் வந்த மாஜிஸ்திரேட்டு நடைபேசியில் சமிக்ஞை கிடைப்பதற்காக மரத்தின் மீது ஏறி வாக்குப்பதிவு துவங்கிய விவரத்தையும் ஒரு மணி இடைவெளியில் வாக்குப்பதிவு நிலவரத்தையும் தெரிவித்தார். அக்கடினமான சூழ்நிலைகளுக்கிடையே தேர்தலை சுமூகமாக நடத்த நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி எங்களைப் பெருமிதம் கொள்ளச் செய்தது. இதன் மூலம் நாட்டை மேம்படுத்துவதில் எங்களுடைய சிறிய பங்களிப்பைச் செய்திருக்கிறோம் ( சங்ரா வாக்குச் சாவடியில் பணியிலிருந்த அலுவலர்கள் சொல்லக் கேட்டது ).

### மணக்கோலத்தில் வாக்களித்தவர்கள்

பிவாண்டி பாராளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த கவிதா தாக்ரே அவர்களின் அனுபவம் வித்தியாசமானது. ஒரு பொறுப்பு வாய்ந்த இந்தியக் குடிமகளாக என்னுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இருப்பதை உறுதி செய்து கொண்டேன். தேர்தல் நாள் என்னுடைய திருமணத்தன்றே வந்தது எதிர்பாராத ஒன்றாகும். இருப்பினும், நான் முதலில் வாக்குச் சாவடிக்குச் சென்று எனது வாக்கைச் செலுத்திவிட்டு அதன்பின்னரே திருமண நிகழ்விடத்திற்குச் சென்றேன். “எந்தச் சூழ்நிலையிலும் தயவு செய்து வாக்களியுங்கள். அது நமது கடமை” என இந்தியக் குடிமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

பென் வட்டத்தில் (Taluk) உள்ள மலேகர் என்ற ஊரைச் சேர்ந்த திகம்பர் ராமா மொகல், ஜல்கானைச் சேர்ந்த நிதின் பட்கு சார்ரேவர், கவிதா பட்டேல் நந்துார் பராரே ஆகியோரும் தங்களுக்கு திருமணம் நடைபெறவிருந்த நாளில் பொறுப்புமிக்க குடிமக்களாக நேரம் ஒதுக்கி வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்தனர். அவர்கள் நாட்டை வலுவாக்கும் முயற்சியில் தங்களின் கடமையை ஆற்றிய உணர்வோடு மணமாலை சூடினர்.

### இந்தியாவில் முதன்முதலில் வாக்களித்தவர் சாம் சரண் நேகி (Sham Saran Neigh)

“வாக்குச்சாவடிக்கு நான் நடந்தே செல்வேன்” என தூரம் அதிகமாக இருப்பினும் துணிச்சலுடன் சொன்னார் நேகி. 07.07.2014 அன்று அதிகாலையிலேயே தனது மனைவி ஹீராமணியுடன் புறப்பட்டு கிண்ணார் மாவட்டத்திலுள்ள கல்பா கிராமத்தில் உள்ள 50ம் எண் வாக்குச்சாவடியை அடைந்தார். அங்கு இவர்கள்தான் முதல் ஆளாகச் சென்றனர். அவர்கள் சென்றடைந்த போது பாரம்பரிய இசைக்கருவி வாசிக்க அவர்களைத் துணை ஆணையர் வரவேற்றார். வாக்காளர் பட்டியலில் அவருடைய பெயர் வரிசை எண் 123–இல் இருந்தது. வாக்களித்ததற்கு அடையாளமாக கை விரலில் மை வைத்து 16வது மக்களவைத் தேர்தலில் வாக்களித்தார்.

1947ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு, 1951ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தேர்தலில் சாம் சரண் நேகி என்ற 97 வயது ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர்தான் முதன்முதலில் வாக்களித்தார். அவருக்கு இந்த வாக்களிக்கும் உரிமை கடமையைக் காட்டிலும் பெரிதானது; அவரது உரிமையைக் காட்டிலும் மிகவும் பெரியதாகும். 1951ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் நேகி வாக்களித்துள்ளார். இவரது இந்த அர்ப்பணிப்பு கோடிக்கணக்கான மக்களுக்கு ஊக்கமளித்துள்ளது. இந்தியாவின் மிகப்பழமையான வாக்காளர்களில் தானும் ஒருவர் என்பது அவரின் நம்பிக்கையாகும்.

செய்தார். அவர் பொழுது சாய்வதற்குள் வாக்குச்சாவடியை அடைந்து வாக்களிக்க வேண்டும். வழக்கத்தைவிட கொஞ்சம் முன்னதாகவே அவருடைய வியாபாரத்தை முடித்துக் கொண்டு அவருடைய கிராமத்திற்குத் திரும்பி வந்து உற்சாகத்துடன் வாக்குச் சாவடியைச் சென்றடைந்தார். அவ்வாறு வாக்குச்சாவடியை சென்றடைந்து நீண்ட வரிசையில் நின்றது அவருடைய உள்ளத்தில் மகிழ்ச்சியையும் நிறைவையும் ஏற்படுத்தியது. “ இன்று நானும் இந்நாட்டின் குடிமகன்”, என்று பெருமிதம் கொண்டார்.

## நாட்டை மேம்படுத்துவதில் எங்கள் சிறு பங்கு

2014ஆம் ஆண்டில் சட்டப்பேரவை மற்றும் மக்களவைத் தேர்தலை சிறப்பாக நடத்துவதில் இடைவிடாத அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட பெயர் தெரியாத, முகம் தெரியாத நபர்களின் முயற்சிகளைப் பற்றிய கதைதான் இது. சங்ரா வாக்குச்சாவடி, நம் நாட்டில் உள்ள தொலைதூரப் பகுதியில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளுள் ஒன்றாகும். இது 53–சங்லாங் வடக்கு(எஸ்.டி.) சட்டப்பேரவை தொகுதி ஆகும். இது சங்லாங் மாவட்டத்தில் உள்ளது. இது மாவட்ட தலைநகரத்திலிருந்து சுமார் 48 கி.மீ. தொலைவில் ஏறக்குறைய நான்கு மணி நேர பயண தூரத்தில் குறிப்பாகக் கரடுமுரடான பாதைகளில் நடந்து செல்லக் கூடிய இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடத்தை இணைக்க சாலை வசதி ஏதும் இல்லை. 9.3.2014 அன்று வாக்குப்பதிவு நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. வாக்குப் பதிவிற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே நானும் எனது குழுவினரும் வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பொருத்தும் பொருட்டு சங்ராவிற்குப் புறப்பட்டு விட்டோம். சங்ராவில் தரைவழி தொலைபேசியோ, அலைபேசித் தொடர்போ இல்லாத நிலையில், அந்தப் பகுதி மாஜிஸ்திரேட்டு எங்களோடு நடைபேசியுடன் (Walkie-Talkie) வந்தார். அதன் மூலம் மணிக்கொரு முறை வாக்குப்பதிவு நிலவரத்தை சங்லாங்கில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரியப்படுத்தினோம்.

வாக்குப்பதிவு முடிந்து மிகக்கடினமான பாதை வழியே நாங்கள் கீழே இறங்கினோம். எங்கள் முழங்கால் வலியைப் பொருட்படுத்தாமல் நாங்கள் கொண்டு வந்த வாக்குப்பதிவு இயந்திரங்களைத் தூக்கிக் கொண்டு திராப் நதியின் குறுக்கே மூங்கில் மரங்களால் உருவாக்கப்பட்டிருந்த பாலத்தின் மீது நடந்து வந்தோம். அந்தப் பாலம் மிகவும் பழமையானதாக இருந்தது. அதன்மீது நடக்கும்போது இருபுறமும் கட்டப்பட்டிருந்த கயிறைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கடந்து வந்தோம். மிகக் கடுமையாக மழைத்தூறல் பொழிந்து, பிடித்திருந்த குடைகள் எங்கள் கைகளை விட்டுப் பறந்து போக எத்தனித்தது. அதன்பின்னர் செங்குத்தான மலையின் மீது ஏற வேண்டியிருந்தது. அதற்கு மூன்று மணிநேரம் ஆனது. அனைவரும் மிகுந்த சோர்வுடன் காணப்பட்டனர். மிகக் குறுகலான பாதை வழியே சுமைதூக்கிகள் எங்கள் சுமைகளைச் சுமந்து சென்றார்கள். மலையேறும் கருவிகள் எதனையும் எங்களுடன் எடுத்து வரவில்லை. அப்பகுதியில் மணற்பாங்கான சிற்றாறு (rivulet) நாங்கள் பயணித்த பாதையை முழுவதும் அடைத்து இருந்தது. அங்கே கிடைத்த மரக்குச்சிகளைக் கைகளில் வைத்து வழியில் உள்ள கட்டைகள், இலைதழைகளை அகற்றியவாறே நடந்து சென்றோம்.

ஒருசில இடங்களில் பாதை மிகக்குறுகலாக இருந்தது. கவனக்குறைவுடன் ஓரடி தவறினாலும் ஆழமான பள்ளத்தாக்கில் விழ வேண்டிய நிலை ஏற்படும். மிகவும் கனமான சுமைகளுடன் சிறுபிழையும் ஏற்பட்டு விடாமல் கவனமாகப் பாறைகளுக்கு அடியே ஊர்ந்து செல்ல வேண்டிய இடங்களும் இருந்தன. ஒரு சில இடங்களில் எங்களுடன் கொண்டு சென்ற இயந்திரங்களைக் கட்டி





## 14. கூட்டத் தொடர் அமைப்பு (Session Structure)

தேர்தல் பள்ளியின் ஒவ்வொரு அமர்வும் பின்வரும் அமைப்பினைப் பின்பற்றும்:–

| வ. எண் | தலைப்பு | விவரம் |
|---|---|---|
| 1. | **கூட்டம் தொடங்குதல்:** | பள்ளி தொடங்குவதற்கு முன் நடைபெறும் 10 நிமிட பிரார்த்தனைக் கூட்டத்தில், மக்களை ஈர்க்கும் வகையில் அவர்கள் கலந்து கொள்வதற்கான நேரத்தை அளிக்கவும், மாவட்டத் தேர்தல் அலுவலர் / தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தின் கீழ் தயார் செய்யப்பட்ட வாக்காளர்கள் பதிவு மற்றும் வாக்களித்தல் குறித்த பல்வேறு பாடல்கள் இசைக்கப்படும். அதன்பின் ஒருங்கிணைப்பாளர், வருகை புரிந்த அனைவரையும் வாழ்த்தி, தேர்தல் பள்ளி குறித்த ஒரு சிறு விளக்கத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைப்பார். |
| 2. | பாடல் இசைத்தல் | பின்னர், வருகை புரிந்தவர்களுடன் ’தேர்தல் பள்ளிப் பாடலை’ (தகவல் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளவாறான) பாடலை அவர் ஆர்வத்துடன் பாடுவார். |
| 3. | அந்நாளிற்கான செயல்பாடு | ஒரு மணி நேரத்திற்கும் மிகாமல் அந்நாளிற்கான செயல்பாட்டினை ஒருங்கிணைப்பாளர் மேற்கொள்வார் ( நாட்டுப்புற கலை செயல்பாடுகள் தவிர) |
| 4. | 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல் | தனிநபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து நடவடிக்கைகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்ற வேண்டும். |
| 5. | முடிவுரை | வகுப்பில் நடத்தப்பட்ட செயல்பாடுகளைக் கற்பிக்கும் வகையில் ‘தேர்தலில் நம்பிக்கை’ (Belief in the Ballot) என்ற கதைத்தொகுப்பில் இருந்து சிறிய கதை ஒன்றைக் கூறுவதன் மூலம் தேர்தல் பள்ளியை நிறைவு செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக, மாதிரி தேர்தல் குறித்த வகுப்பு நடைபெற்றிருக்குமாயின், சிரமமான மற்றும் இடையூறான சூழல்களிலும் கூட வாக்களிக்கச் சென்ற மக்கள் பற்றிய கதையாக இருக்கலாம். |





## 15. மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கிய மக்களைச் சேர்த்தல்:

தேர்தல் கல்வியறிவுக் குழுவில் மாற்றுத்திறன் கொண்ட நபர்களும் பங்கு பெறும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.



- மாற்றுத் திறனாளி நபர்கள் இதில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், பிற நபர்களை இது தொடர்பாக தெரிந்துகொள்ள ஊக்கப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- அவர்களுக்கு இக்குழு நடைபெறும் இடத்திற்குச் செல்ல ஏதுவாக வழிவகை செய்ய வேண்டும்.
- கேட்கும் குறைபாடு உள்ள நபர் இவ்வகுப்பில் கலந்து கொள்வாரெனில் சைகை மொழி பெயர்ப்பாளர் உடன் இருத்தல் வேண்டும் (அம்மொழி பெயர்ப்பாளர் அந்நபரின் நண்பனாகவோ தெரிந்தவராகவோ இருக்கலாம்).
- இக்குழுவின் அனைத்து செயல்பாடுகளிலும் மாற்றுத்திறனாளி நபர்கள் விடுபட்டு விடா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- மாற்றுத் திறனாளி நபர்கள் குறிப்பிட்ட அளவில் இக்குழுக்களில் இடம் பெற்றிருக்க வேண்டும்.





அப்பகுதியில் அதிகபட்ச வாக்குப் பதிவு நடப்பதற்கு இந்த மக்களாட்சித் தூதர்கள் மிகுந்த உதவிகரமாக இருப்பதுடன் அப்பகுதி மக்களை வாக்களிக்க ஊக்கப்படுத்துகிறார்கள். ஒவ்வொரு மக்களாட்சித் தூதரும் வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வர பெரும் பங்காற்றுகிறார்கள்.

சீதாப்பூர் மாவட்டத் தேர்தல் அலுவலரான கிஞ்சல்சிங் என்பவர் மாற்றுத் திறனாளிகள் வெளியே வந்து வாக்களிக்க ஊக்கப்படுத்தும் விதமாக இந்த உத்தியைக் கையாண்டார்.

“மக்களாட்சியை வலுப்படுத்தவும், புதிய உயரங்களை எட்டவும் எனது வாக்கு வகை செய்யும்” என்ற தலைப்பில் ஒரு ஓவிய / பதாகைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்து அதில் 4,000–க்கும் அதிகமான மாற்றுத்திறனாளர்கள் கலந்து கொள்ளச் செய்தார். அது அந்த மாற்றுத் திறனாளர்களிடையே ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஒரு மாவட்ட நிர்வாகமே எங்களை சிறப்பாக அழைத்தது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல, நிச்சயம் எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்போம் என்று ராம்லால் என்ற மாற்றுத்திறனாளி கூறினார். பலரும் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து ஓவியம் வரைந்திருந்தனர். அந்தப் பதாகைகளில் மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் எவ்வாறு மகிழ்வுடன் வாக்குச் சாவடிக்குச் சென்று தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றி விட்டு வெளியே வந்து தங்கள் அடையாளமிடப்பட்ட விரலைக் காட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள் என்பதாய் அமைந்திருந்தது. சீதாப்பூர் மாவட்டம் முழுவதுமுள்ள வாக்குச்சாவடிகளில் அந்தப் பதாகைகள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

ஒரு காலால் மெதுவாக நடந்தபடி வந்த மாற்றுத் திறனாளியான ராம்லால் என்பவர் “என் வாழ்வில் முதன்முறையாக வாக்களித்துள்ளேன். மாவட்ட நிருவாகம் அளித்த ஊக்கம், அவர்கள் கொடுத்த தன்னம்பிக்கை மற்றும் எங்களுக்கு அவர்கள் செய்த உதவி ஆகியவைதான் இதற்குக் காரணம்” என்றார்.

### என் தலைவரை நானே தேர்ந்தெடுப்பேன்

ரஸ்தாலி தற்போது கோலாசிப் மாவட்டத்திலுள்ளது. அது 1998–ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலின் போது ஐஸ்வால் மாவட்டத்தில் இருந்தது. அது ஒரு சிறிய கிராமம். மிசோரம் மாநிலத்தின் வடமேற்குப் பகுதியில் அஸ்ஸாம் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. அந்தக் கிராமத்தில் 23.2.1998 அன்று சட்டப் பேரவைத் தேர்தல் நடத்துவதாக அறிவிக்கப்பட்டு மாநில அரசால் பொது விடுமுறையும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் ஒரு மரக்கட்டை வியாபாரம் செய்யும் இளைஞருக்கு, அன்று விடுமுறை இல்லை. அவர் மரக்கட்டைகளை அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று விற்று தன்னுடைய அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தார். அவர் அருகிலுள்ள கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமெனில் 8கி.மீ. நடந்து செல்ல வேண்டும்.

அவர் தனது பணியை விட்டு வாக்களிக்க வரவேண்டுமா வேண்டாமா என்னும் குழப்பமான மனநிலையில் இருந்தார். தேர்தல் நாளன்று அவர் சட்டத்தின் பார்வையில் ஒரு இந்தியக் குடிமகன். எனினும், அவருடைய சமூகப் பொருளாதார நிலையில் அவர் ஒரு வாக்காளர் மற்றும் வாக்களிக்க உரிமையுள்ளவர். எனவே, அவர் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று மரக்கட்டைகளை விற்பனை செய்துவிட்டு மீண்டும் தன் கிராமத்திற்குத் திரும்ப வந்து வாக்களிக்க முடிவு

## கதை 2

விவேக் ஒரு துடிப்பான இளம் வாலிபன். அவனுடைய வாழ்க்கை ஒரு குறுகிய விவசாய வட்டத்திற்குள் அடங்கியிருந்தது. அந்தக் கிராமத்தில் உள்ள எல்லாருக்கும் அவன் உதவி செய்பவனாக வாழ்ந்து வந்தான். அவன் எப்பொழுதும் புன்னகையுடனும் அனைவராலும் விரும்பப்படுபவனாகவும், கிராமத்தில் அனைவருக்கும் அறிந்தவனாகவும் இருந்தான். தேர்தல் நெருங்கிவரும் சூழலில் அப்பகுதியின் வட்டார வாக்குச்சாவடி நிலை அலுவலர் விவேக்கிற்கு 24 வயதாகியும் அவனது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாததை அறிந்தார். விவேக்கிற்கு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விருப்பம் இல்லாததைக் குறித்து ஆச்சரியப்பட்டார். ஏன் விவேக்கிற்கு வாக்களிக்க விருப்பமில்லை ? அந்த அதிகாரி அவனுடைய எண்ணத்தை மாற்ற என்ன செய்தார் ?

## கதை 3

சன்ஹிதா, சுஷாந்த் மற்றும் தீபா ஆகிய மூன்று கல்லூரி மாணவர்கள் டெல்லியிலிருந்து வடக்கே இமாச்சல பிரதேசத்தை நோக்கி மாநில அரசுப் பேருந்தில் அரசியல் நிலவரங்கள் குறித்து கலந்துரையாடியவாறே பயணம் செய்தனர். இதில் சன்ஹிதா, அரசாங்கம் செய்த சாதனைகள் மற்றும் நேர்மறையான காரியங்கள் குறித்து பட்டியலிட்டான். ஆனால், தீபாவோ அதற்கு எதிராக வாதம் செய்தாள். சுஷாந்த் இரண்டும் கலந்த மனநிலையில் இருவருக்குமிடையில் தவித்துக் கொண்டிருந்தான். சோர்ந்து போயிருந்த பேருந்து நடத்துநர், அவர்கள் பேசுவதை ஆர்வமுடன் கவனித்தார். அவர்களுடைய பேச்சிலிருந்து மூவரும் ஒருமுறைகூட தேர்தலில் வாக்களிக்காதவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டார். அவர்களுடைய பேச்சில் குறுக்கிட்ட நடத்துநர், அந்த மூன்று இளைஞர்களிடம் வாக்களிப்பதன் அவசியம் பற்றியும் அதனால் எவ்வாறு நாட்டின் வளர்ச்சியில் அவர்கள் பங்காற்ற உதவ முடியும் என்றும் கூறி அவர்களை ஊக்கப்படுத்தினார்.

## உத்தரப் பிரதேசத்தின் குடியாட்சி தூதர்கள்

நமது உரிமைக்காகப் போராடுவோம், நாம் எல்லாரும் வாக்களிக்கச் செல்ல வேண்டும், ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டும் என்று நடுத்தர வயதுடைய திலீப் என்ற மாற்றுத் திறனாளர் கூறினார்.

திலீப் என்பவர் உத்திரப் பிரதேசத்தின் சீதாப்பூர் மாவட்டத்தில், தேர்தலில் வாக்களிக்கும் அவசியத்தை மக்களிடையே வலியுறுத்தும் வகையில் வாக்குச்சாவடி தூதராகப் பணியாற்ற தெரிவு செய்யப்பட்ட 3000 மாற்றுத் திறனாளர்களில் ஒருவராவார். சீதாப்பூரின் 3000 வாக்குச் சாவடிகளிலும் மாற்றுத் திறனாளர்கள் பிரதிநிதிகளாக உள்ளனர். இவர்கள் குடியாட்சித் தூதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை அளிக்கப்பட்டுள்ளது. இது அவர்களுக்கு ஒரு பெருமையையும் தன்னம்பிக்கையையும் கொடுத்துள்ளது. ஒரு வண்ணமயமான விழா ஏற்பாடு செய்யப்பட்டு அனைத்து குடியாட்சி தூதர்களையும் மோட்டார் சைக்கிளில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு அவர்களுடன் மாற்றுத் திறனாளி வாக்காளர்களையும் மோட்டார் சைக்கிளின் பின்புறம் அமர வைத்து கைத்தட்டல்களுடனும் வாழ்த்துக்களுடனும் அவர்கள் கூட்டமாகக் கூடி வரவேற்கப்பட்டனர்.





## 16. வாக்காளர்களின் தோழன்

பொது மக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே தேர்தல் பள்ளியின் முக்கியக் குறிக்கோளாகும். பொதுமக்கள் அவர்களது சமூக மக்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதோடு, பெருமளவிலான மக்கள் வாக்களிப்பதை ஊக்குவிப்பர். தேர்தல் பள்ளியானது, குடிமக்களை ஊக்கப்படுத்தி "வாக்காளர்களின் தோழன்" (Matdaata Mitra) என்ற பங்களிப்பினை ஏற்பதற்கான வாய்ப்பை வழங்கும். இவர்கள், தேர்தல் நடைமுறையில் சமுதாய உறுப்பினர்களை வழிநடத்தி, அவர்களை வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்ப்பதற்கும் வாக்களிப்பதற்கும் ஊக்குவிப்பர்.

**தெரிவு செய்தல்:** தேர்தல் பள்ளியின் ஆறு வகுப்புகளிலும் மற்றும் அனைத்து நடவடிக்கைகளிலும் முனைப்புடன் பங்கேற்ற உறுப்பினர்களிலிருந்து "வாக்காளர்களின் தோழன்" தெரிவு செய்யப்பட வேண்டும். இவர் எந்த வயதை உடையவராகவும் சமூகத்தில் ஊக்கமளிப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஒருங்கிணைப்பாளர் மற்றும் வாக்குச்சாவடி அலுவலரால் இவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அனைத்து கிராமப்புறங்களை / சமுதாயங்களை உள்ளடக்கிய பகுதிகளைச் சேர்ந்த 100 வாக்காளர்களுக்கு தோராயமாக 2 முதல் 4 தேர்தல் நண்பர்கள் இருக்கலாம். மாற்றுத் திறனாளிகளையும் கவனத்தில் கொள்ளும் பொருட்டு இவர் சைகை மொழி கற்றுக் கொள்ளலாம்.

**பணி:** வாக்காளர்களின் தோழனாகப் பணிபுரிபவருக்கு அடையாள வில்லை கொடுக்கப்பட்டு, தேர்தல் பள்ளியில் பல்வேறு நடவடிக்கைகளை நடத்துவதிலும், தேர்தல் பள்ளிகளால் நடத்தப்படும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கு உதவ வேண்டும். பங்கேற்பாளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதோடு மட்டுமல்லாமல் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் நடவடிக்கைகளில் பங்கேற்பாளர்களை ஈடுபடுத்துவதிலும் இவர் உதவுவார். இவர் தேர்தல்களின்போது தேர்தல் தன்னார்வலராகவும், வாக்காளர்களின் தோழனாக ஒரு வருடம் பணியாற்றிய பிறகு தேர்தல் பள்ளியின் ஒருங்கிணைப்பாளராகவும் கருதப்படுவார்.

**பாராட்டு :** வாக்காளர்களின் தோழன் மாவட்டத் தேர்தல் அலுவலரிடமிருந்து பாராட்டுச் சான்றிதழைப் பெறுவார். மாவட்ட அளவில் சிறப்பாகப் பணிபுரிந்தோர், மாவட்ட அளவிலான தேசிய வாக்காளர் தின விழாவில் மாவட்டத் தேர்தல் அலுவலரால் பாராட்டப் பெறுவர்.

## 17.துவக்கவிழா மற்றும் வெளியீடு நிகழ்ச்சி :

### முன் விளம்பரம்

வாக்குச்சாவடி நிலை அலுவலர் தேர்தல் பள்ளி துவக்கவிழா தொடர்பாக உள்ளூர் பொதுமக்களிடையே விளம்பரம் செய்யத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்வதுடன் கைப்பிரதிகள் மற்றும் பதாகைகள் அமைப்பதன் மூலம் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளலாம். (உள்ளூரில் இருக்கும் கிராமப்புற / பாரம்பரிய ஊடகங்கள் மூலமாகவோ அல்லது கிராம சபைக் கூட்டங்களிலோ அறிவிப்பு செய்யலாம்)

வாக்காளர் பதிவு அலுவலர் அல்லது மாவட்டத் தேர்தல் அலுவலர்களின் இருப்பைப் பொறுத்து அவர்களின் தலைமையில், துவக்க விழாவினை நடத்தலாம்.





## துவக்க விழாவில் மேற்கொள்ளவேண்டிய முக்கிய அம்சங்கள்

வாக்குச்சாவடி நிலை அலுவலர், துவக்க விழாவிற்கு உரிய ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ள வேண்டும். தேர்தல் பள்ளி துவக்கவிழா ஒரு தனித்தன்மை வாய்ந்த நிகழ்வாக மக்களிடையே அமைய வேண்டும்.

I. தேர்தல் பள்ளி துவக்க விழா மூலம் அதன் நோக்கம் மக்களிடையே அறிமுகப்படுத்தப் படுவதோடு, ஆண்டு முழுமைக்குமான அதன் நிகழ்வுகள் விரிவாக தீட்டப்பட வேண்டும்.

II. திரைப்படக் காட்சி–வேடிக்கை, நண்பன் மற்றும் வாக்களிப்பு (மஸ்தி, தோஸ்தி அவுர் மத்தான்).

III. திரைப்படக் காட்சிக்குப் பிறகான கலந்துரையாடல்

a. திரைப்படத்தில் காட்டப்பட்ட தகவல்கள் தொடர்பான வினாடி வினா.

b. வாக்காளராகப் பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் தொடர்பான பார்வையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தல்.

IV. தேர்தல் பள்ளிப் பாடலைத் தெரிவு செய்தல் தொடர்பாக ஒரு போட்டி நடத்தப்படவேண்டும். அப்பாடல் உள்ளூர் மொழியில் இயற்றப்பட்டதாகவும், நான்கு முதல் எட்டு வரிகளுக்கு மிகாமல், வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், தேர்தலில் பங்கேற்பதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்துவதாக இருக்கவேண்டும். பரிசு பெற்ற பாடலை, வாக்குச் சாவடி நிலை அலுவலர் அல்லது ஒருங்கிணைப்பாளர் தேவையான மாற்றங்களைச் செய்து அத் தேர்தல் பள்ளியின் பாடலாக மாற்றியமைப்பார்.

V. சுவர் பத்திரிகையில் முதன்முதலாக வரைதல் (விவரங்களுக்கு சுவர் பத்திரிகை செயல்பாட்டினை பார்வையிடுக).

VI. பார்வையாளர்களின் ஆர்வம் மற்றும் வயதைப் பொறுத்து ஏனைய போட்டிகள் நடத்தப்படலாம். எடுத்துக்காட்டாக பாடல்கள் மற்றும் முழக்கங்கள் போன்றவை. அனைத்துப் போட்டிகளையும் முன்னறிவிப்பு செய்தல் அவசியம். இவையனைத்தும், பார்வையாளர்கள் தனது சொந்த கருத்துகளோடு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு உதவும். இவ்வாறு நடத்தப்படும் போட்டிகளில் கிடைக்கப்பெறும் தேர்தல் தொடர்பான பதிவுகள் பின்னர் தேர்தல் பள்ளியை அலங்கரிக்கவும் பள்ளியில் நடைபெறும் செயல்பாடுகளுக்கும் தகவல் தொகுப்பாக அமையும். (எடுத்துக்காட்டாக பாடல்கள் மற்றும் கதைகள்).

## கற்றலின் முக்கிய அம்சங்கள்

1. தேர்தல் பள்ளியின் நோக்கம் குறித்த அறிமுகம்.
2. தேர்தல் நடைமுறைகள் குறித்து விரிவான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
3. தேர்தல் பள்ளிப் பாடல்.





- ஒவ்வொரு நிலையிலும் நாசிக் பாதுகாப்பு அச்சகத்தில் (Nasik Security Press) பிரத்தியேகமாக அச்சிடப்பட்ட காகிதத்தினால் மூடப்பட்டு முத்திரையிடப்படுவேன். அதில் வாக்குப்பதிவு முகவர்கள், வேட்பாளர்கள் கையொப்பமிடவேண்டும்.
- வாக்குப் பதிவுக்குப் பின்னர் என்னைத் தூக்கிச் செல்லும் பெட்டியில் வைத்து மூடி முத்திரையிடப்பட்டு, அதில் வாக்குப் பதிவு முகவர்கள் கையொப்பமிடப்பட வேண்டும். அதன் பின்னர் என்னை பாதுகாப்பான வைப்பறைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அந்த வைப்பறை மூடி முத்திரையிடப்படும். அதில் வேட்பாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்கள் கையொப்பமிட வேண்டும்.
- வாக்கு எண்ணிக்கை நாளில், வேட்பாளர்கள் மற்றும் அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் எண்ணப்பட வேண்டும்.
- அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் ஒவ்வொரு நிலையிலும் என் மீது கண்வைத்து விழிப்புடன் பணியாற்றுவார்கள்.


✓ கடந்த ஆண்டுகளில் என் நேர்மைத் தன்மை குறித்து பல்வேறு மனுக்களை 5 வெவ்வேறு உயர்நீதிமன்றங்கள் ஆராய்ந்தன, இறுதியில், 5 நீதிமன்றங்களும் எனது நேர்மை, பாதுகாப்பு தன்மை மற்றும் உறுதித் தன்மை நல்ல விதமாக உள்ளது என்ற முடிவுக்கே வந்துள்ளன.

✓ உலகின் பல்வேறு நாடுகளின் நிபுணர்கள் இந்தியாவின் தேர்தல் நடைமுறையினை ஆய்வு செய்து விட்டு, 86.6 கோடி வாக்காளர்களைக் கொண்ட இந்திய நாட்டின் தேர்தல் நடைமுறைகள் மிகவும் நம்பகமானது, நேர்மையானது என்பதை உறுதிப் படுத்தியுள்ளனர்.

## நாட்டுப்புறக் கலை வடிவில் நிகழ்ச்சிகள் நடத்திட கதைக்களம்

### கதை 1

இன்று திவ்யாவின் பிறந்தநாள். அவள் 18 வயதை அடைந்து விட்டாள். எனவே, பிறந்த நாள் விழா நடைபெறவிருந்த நிலையில், அவள் இன்னும் ஒரு வாரத்தில் நடைபெறப் போகிற பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருந்தாள். அப்பொழுது தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திவ்யாவின் தாத்தா அவளுடைய பிறந்த நாளை முன்னிட்டு அவளைப் பார்க்க வந்தார். அவருக்கு வாக்களிக்கும் வயதை அடைந்துவிட்ட தனது பேத்தியை வாழ்த்துவதை விட வேறென்ன முக்கியமான வேலை இருந்துவிடப் போகிறது. தனது பேத்தி நுழைவுத் தேர்வுக்காக கடினமாக உழைத்துக் கொண்டிருந்தது அவருடைய மனதிற்கு மகிழ்வைத் தந்தாலும், வாக்காளர் பட்டியலில் பெயர்ப் பதிவு செய்வது குறித்து விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது அவருக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. அதனை மாற்ற தாத்தா விரும்பினார். அவளது தேர்வுக்குப் பிறகு, திவ்யாவை வாக்காளராகப் பதிவு செய்ய உற்சாகப்படுத்தி ஒரு துடிப்பு மிகுந்த வாலிபப் பெண் பொறியாளர் தேசத்தின் நாளைய மக்களாட்சியை எவ்வாறு வளமையாக்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்தினார்.



### ஆனால் நான் தேர்தலுக்குத் தயாராக உள்ளேனா ?

- இல்லை. நான் உருவாக்கப்படும் முன்னரும், தேர்தலில் பயன்படுத்த ஆயத்தப்படுத்துவதற்கு முன்பும் பல கட்ட சோதனைகளுக்கும் பாதுகாப்பு சோதனைகளுக்கும் உட்படுத்தப்படுவேன்.
- BEL மற்றும் ECIL நிறுவனங்களின் பொறியாளர்கள் முதற்கட்டமாக என்னுடைய இயந்திர பாகங்கள் மற்றும் அவை செயல்படும் விதம் குறித்து சோதனை செய்வார்கள். அதன்பிறகு என்னை மிகவும் பாதுகாப்பான காகிதத்தில் மூடி முத்திரையிடுவார்கள். அந்த முத்திரையைப் பிரிக்காமல் என்னை திறக்க இயலாது.
- அதன் பின்னர் என்னை ''மாதிரித் தேர்தல்'' எனப்படும் மாதிரி சோதனைக்கு உட்படுத்தி குறைந்தபட்சம் 1000 ஒட்டுக்களை பல்வேறு வாக்காளர்களுக்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் பதியச் செய்து சோதனை செய்வார்கள்.
- ''மாதிரித் தேர்தல்'' எனப்படும் மாதிரி சோதனைக்கு உட்படுத்தப்படும்போது வாக்குச் சீட்டு முறையிலும் வாக்குகள் பதியப்பட்டு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் முடிவையும், வாக்குச் சீட்டு எண்ணிக்கையின் முடிவையும் ஒப்பிட்டு நேர் செய்யப்படும். இந்த மாதிரித் தேர்தல் மூலம் என்னுடைய நேர்மைத் தன்மை உறுதிசெய்யப்படும்.

### நான் எவ்வாறு வாக்குச்சாவடிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறேன் ?

- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் ஒரே வரிசையாக இல்லாமல் சீரற்ற (randomized) முறையில் அதற்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கணினி மென்பொருள் மூலம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஒதுக்கீடு செய்யப்படும். எனவே, எந்த வாக்குப் பதிவு இயந்திரம் எந்த வாக்குச் சாவடிக்கு அல்லது தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்ற விவரம் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கும் முன் கூட்டியே தெரிய வாய்ப்பில்லை.
- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களின் சீரற்ற (randomized) பட்டியல் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் வழங்கப்படும்.
- அதன்பிறகு, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை வாக்குப் பதிவு இயந்திரத்தில் அகர வரிசைப்படி அமைக்கப்படும். எனவே எந்தவொரு வேட்பாளரின் பெயரையும் முன்னதாகவே கணிக்கவும் இயலாது.
- வேட்பாளர்களின் பெயர்கள் அமைக்கப்பட்ட பின்னர் மற்றுமொரு மாதிரித் தேர்தலுக்குக் குறைந்தபட்சம் 1000 வாக்குகள் பதியச் செய்வதற்கு சீரற்ற (randomized) முறையில் வேட்பாளர்களால் நான் தெரிவு செய்யப்படுகிறேன்.

### அதன் பின்னர் அந்தத் தேர்தல் நாளும் வந்தது

- தேர்தல் நாளன்று, வாக்களிப்பு துவங்குவதற்கு முன்பாக மற்றுமொரு மாதிரி வாக்குப் பதிவானது குறைந்த பட்சம் 50 வாக்குகள் பதிவாகும் வகையில் ஒவ்வொரு வேட்பாளரின் முகவரின் முன்னிலையில் நடத்தப்படும்.



### ஆதாரங்கள்

1. (வேடிக்கை, நண்பன் மற்றும் வாக்களிப்பு (fun, friendship and voting) மஸ்தி தோஸ்தி அவுர் மத்தான்–திரைப்படம்
2. வானொலி கதை–ஜனநாயக விரைவு ரயில்

### தேவைப்படும் பொருட்கள்

1. திரை, ஒளிப்படக்கருவி, மடிக்கணினி மற்றும் ஒலிபெருக்கிகள்
2. காகிதங்கள் மற்றும் வண்ண தீட்டுக்கோல், பேனா / பென்சில்கள்
3. பரிசுகள் மற்றும் வணிகப் பொருட்கள்.

வாக்குச்சாவடிநிலை அலுவலர், அப்பகுதியில் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் உள்ள நபர்களைத் தேர்தல் பள்ளியின் முதல் அமர்விற்கு வரவழைக்க முயற்சிக்க வேண்டும். மக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களான வியாபாரம் மற்றும் வணிகம் நடைபெறும் இடங்கள் நியாய விலைக் கடைகள் அல்லது பல்பொருள் அங்காடி, முடிதிருத்தகம், பண்ணைகள், அங்கன்வாடி மையங்கள் முதலியன கருதப்படுகிறது. ஆகவே, கடை முதலாளிகள், முடி திருத்துபவர் ஆகியோர் தேர்தல் பள்ளியின் முதல் உறுப்பினர் ஆவர்.

### 18. கண்காணித்தல்:

மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியும் மாவட்டத் தேர்தல் அலுவலர்களும் செயல்திறன் மிக்க கண்காணிப்பு அமைப்பு ஒன்றினை வடிவமைக்க வேண்டும். இப்பள்ளி நடவடிக்கைகளின் செயல்திறனை அவ்வப்போது தலைமைத் தேர்தல் அதிகாரி மதிப்பீடு செய்ய வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையமும் இத்தகைய மதிப்பீட்டு ஆய்வுகளை நடத்தும்.

### 19. சமூக வானொலி:

தேர்தல் கல்வியறிவு குறித்த செய்திகளைப் பரப்புவதற்காக, சமூக வானொலியானது ஒரு சக்தி வாய்ந்த கருவியாகப் பயன்படும். இதனை தலைமைத் தேர்தல் அதிகாரி / மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் தேர்தல் பள்ளி நடவடிக்கைகளை கூர்ந்தாய்வு செய்ய வேண்டும். சமூக வானொலி, தேசிய கல்வியறிவுக் குழுவின் ஒருங்கிணைந்த பகுதியாக மட்டுமல்லாமல், அவ்வானொலி நடத்தும் சமூக வானொலிக் குழுவினைத் தேர்தல் பள்ளியின் ஓர் அமர்விற்கு வருமாறு அழைப்பு விடுத்து அவ்வமர்வின் முக்கிய கற்றல் தொகுப்புகளைக் குறித்து அவர்களின் நிகழ்ச்சியில் கலந்துரையாடுமாறு அறிவுறுத்தலாம்.

மாவட்ட அளவிலான பல்வேறு சமூக அமைப்புகள் / தன்னார்வ நிறுவனங்களுடன் கூட்டிணைவை ஏற்படுத்தி, வாக்காளர் கல்வியறிவு தொடர்பான தலைப்புகளில் வாராந்திர / மாதாந்திர நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்.

இத்தகைய சமூக அமைப்புகள் தன்னார்வ நிறுவனங்களுக்குத் தேர்தல் கல்வியறிவு தொடர்பான அடிப்படை பொருள்கள், தகவல் தொகுப்புகள் சென்றடைய மாவட்டத் தேர்தல் அலுவலர் / வாக்காளர் பதிவு அலுவலர், ஆவன செய்ய வேண்டும்.



## 20. ஒருங்கிணைப்பாளருக்கான அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள்








### தேர்தல் இயந்திரம் : மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பற்றிய துண்டறிக்கை

**ஹாய், நான்தான் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம். என்னைப்பற்றி அறிய விரும்புகிறீர்களா ? எனக்கு ஆங்கிலத்தில் Electronic Voting Machine (மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்) என்ற நீண்ட பெயருண்டு. சுருக்கமாக EVM என்று அழைப்பர்.**

**நான் என்ன பணி செய்கிறேன் என்றும் என்னுடைய பணி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா ?**

- நான் விரிவான தேர்தல் நடைமுறைக்கு பாதுகாவலனாக உள்ளேன்.
- 2014ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 55கோடிக்கும் அதிகமான இந்திய மக்கள் தாங்களாகவே முன் வந்து தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா ?
- ஆம், அது சரியே, மேற்காணும் எண்ணிக்கை, நம் நாட்டின் தேர்தல், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் நிகழ்வு என்பதைக் காட்டுகிறது.
- சுதந்திரமான மற்றும் நேர்மையான முறையில் மிகப்பெரிய அளவில் தேர்தலை நடத்த நான் உதவுகிறேன்.

நான் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளேன் என்பதையும் எவ்வாறு தேர்தலில் உதவுகிறேன் என்பதைப் பற்றியும் நீங்கள் அறிய விரும்பலாம்.

- தேர்தலில் வாக்குகளை மின்னணு முறையில் பதிவு செய்து சேமிக்கவும், அதனைக் கணக்கிடவும் ஏற்ற வகையில் பலவகையான பாதுகாப்பு அம்சங்களுடன் சேதப்படுத்த இயலாத வகையில் அமைக்கப்பட்டுள்ளேன். **ஏன் சேதப்படுத்த இயலாது ?**
- என் மூளையும் எனது கட்டளை நிரலும் ( programme ) ஒருமுறையே ( One time ) செயல்படுத்தத்தக்க சில்லுகளால் ( Chip ) ஆக்கப்பட்டிருப்பதால் அதனைப் படிக்கவும் இயலாது மாற்றவும் இயலாது.
- என்னை பிற அமைப்புடன் மற்றும் இணைய தளத்துடன் இணைக்க இயலாது. எனவே, என்னை கம்பி வடம் (wire) அல்லது கம்பியில்லா தந்தி (wireless) முறையில் எந்தவொரு மோசடியும் செய்ய இயலாது.

என்னை இந்த அளவிற்கு பாதுகாப்பாக உருவாக்கியவர்கள் யார் ?

- நம் நாட்டிலுள்ள இரு முன்னணி பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த திறமையான பொறியாளர்களால் நான் உருவாக்கப்பட்டேன். ஆம் இந்திய பாதுகாப்புத்துறை தனது அணுசக்தி தொடர்பான சாதனங்களை உருவாக்கப் பயன்படுத்தும் அதே பொறியாளர்களே என்னையும் உருவாக்கினார்கள்.
- என்னுடைய மென்பொருள் (Software) கட்டமைப்பு மற்றும் வன்பொருள் (Hardware) அமைப்பு ஆகியவற்றை ஆய்வு செய்த பல்வேறு இந்திய தொழில் நுட்பக் கழகத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற பேராசிரியர்கள் அடங்கிய நிபுணர் குழுவினர், நான் 100 சதவீதம் பாதுகாப்பானவன் என உறுதிப்படுத்தியுள்ளனர் என்பதில் மிகையேதுமில்லை.

### மாதிரி வாக்குச் சீட்டு : (தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது)

| தேர்தல் பள்ளி சின்னத்திற்கான தேர்தல் வாக்குச்சீட்டு | | |
|---|---|---|
| திரு. எருமை |  | ☐ |
| திரு. ஒட்டகம் |  | ☐ |
| திரு. குதிரை |  | ☐ |
| திருமதி. முயல் |  | ☐ |
| திரு. நாய் |  | ☐ |
| இவர்களில் எவரும் இல்லை |  "NOTA" | ☐ |



## i. தேர்தல் பத்திரிக்கை (Chunav Patrika) சுவர் இதழ்

### கண்ணோட்டம் (Overview)

சுவர் இதழ் என்ற உத்திக்குப் பின்னால் தேர்தல் பள்ளியின் உறுப்பினர்கள் அதனை தயாரிக்கும்போதே கற்றுக்கொள்கிறார்கள் என்பதும், அந்தச் சுவரைக் கடந்து போகும் உறுப்பினரல்லாதோர் மற்றும் பொதுமக்கள் அதிலுள்ள செய்திகளைப் படிப்பதன் மூலம் தகவல்களை அறிய முடியும் என்பதேயாகும். தேர்தல் கல்வியறிவு தொடர்பான கருத்துகளை காட்சிப் படுத்துவதற்கு இச்சுவரை உபயோகிக்கலாம்.

### தேவைப்படும் பொருட்கள்:

i) வண்ணச் சுண்ணக் கட்டி (சாக்பீசு) அல்லது சாயம்

ii) காகிதம் மற்றும் எழுதுகோல், வண்ணம் தீட்டும் கோல் அல்லது உறுப்பினர்கள் பொருத்தமானதாகக் கருதும் வேறு பொருட்கள்.

### முறை:

1. ஒருங்கிணைப்பாளர் இச்செயல்முறைக்காக ஒரு பிரதானக் கட்டடத்தின் வெளிப்புறச் சுவரை முன்னதாகவே அடையாளம் கண்டிருத்தல் வேண்டும் (தேர்தல் பள்ளி அமைந்துள்ள கட்டடத்திற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்)

2. தேர்தல் பள்ளியின் துவக்க விழாவில் சுவர் இதழில் வரைவதற்கு ஆர்வமுள்ள தன்னார்வலர்களுக்கு ஒருங்கிணைப்பாளர் அழைப்பு விடுக்கலாம். சுவர் இதழ் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இப்பிரிவுகள் குறித்த விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் விளக்கி கூறப்பட்டுள்ளது.

3. துவக்க விழாவில் சுவர் இதழின் மையக்கருத்து **"குடியரசு" : மக்களின் அரசு, மக்களுக்காக, "மக்களால்"** என்ற தலைப்பில் இருக்கலாம். சுவர் இதழ் குறித்த மாதிரி ஒன்று பக்கம் 54 – 55 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

| தலைப்பு | |
|---|---|
| **பிரிவு–1**<br>இப்பகுதியின் மையக் கருத்து அல்லது சுவர் இதழின் தலைப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் தேர்தல் நடைமுறை குறித்த அடிப்படை விவரங்களை வெளிப்படுத்துவதாகும். | **பிரிவு–2**<br>இப்பகுதியில் தேர்தல் பள்ளி தொடர்பான மையக்கருத்தை வெளிப்படுத்தும் விதமாக அமைக்கப்பட வேண்டும். |



| பிரிவு–3 | பிரிவு–4 |
| --- | --- |
| இப்பகுதி, மையக் கருத்து தொடர்பாக பார்வையாளர்கள் கருத்தினை வரவேற்கும் விதமாக 'நீங்கள் வாக்காளரா ?. இல்லையெனில் வாக்காளராக என்ன செய்ய வேண்டும் ? என்பது போன்ற கேள்விகள் எழுப்பப்பட பார்வையாளர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். அத்துடன் இதில் ஒரு பகுதியை பார்வையாளர்கள் தங்கள் கேள்விகள், கருத்துகளை தெரிவிக்கும் வகையில் காலியாக விடப்பட வேண்டும். | இப்பகுதியில், அடுத்த தேர்தல் பள்ளி நடைபெறும் நாள் நேரம், நடத்தப்படவிருக்கும் போட்டிகளின் விவரங்கள், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுவதாக இருக்கும். தேர்தல் பள்ளியின் உறுப்பினர்களின் பெயர்கள் இப்பகுதியில் வெளியிடப்படும். வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பெயர் மற்றும் மாவட்டத்தின் பெயர் மற்றும் தொடர்பு எண்கள் பெரிதாக எழுதப்படவேண்டும். |

4. உறுப்பினர்கள் சுவரை 4 பிரிவுகளாகப் பிரித்து, அதில் தகவல்களை வண்ணச்சாயம் கொண்டோ சுண்ணக்கட்டி கொண்டோ தெரிவிக்கலாம் அல்லது அட்டைத் தாளில் அனைத்து தகவல்களையும் அச்சிட்டு இச்சுவரில் ஒட்டலாம்.

5. தேர்தல் பள்ளியின் துவக்க விழாவில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற பல்வேறு வெற்றியாளர்களின் தகவல்களை சுவர் இதழின் ஒரு பகுதியில் வெளியிடலாம்.

6. தேர்தல் பள்ளி நடைபெறவிருக்கும் நேரம் மற்றும் நாளினை இச்சுவர் இதழின் இறுதிப் பிரிவில் ஒருங்கிணைப்பாளர் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். இதன் மூலம், சுவரைக் கடந்து செல்லும் அனைவரும் தேர்தல் பள்ளியின் அடுத்த கூட்டத் தொடர் குறித்து அறிந்து கொள்ள உதவும்.

7. சுவர் இதழின் தகவல்கள் ஒவ்வொரு கூட்டத்தொடர் நிறைவடைந்ததும், (அல்லது உறுப்பினர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும் நேர்வில்) மாற்றப்படலாம் அல்லது நாளது வரையாக்கப்படலாம். ஒருங்கிணைப்பாளர் உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கான மையக் கருத்தினை உருவாக்கலாம்.




## திரு. நாயின் சொற்பொழிவு

சரி, சரி... எனது கன்னங்களில் நிறைய முடியிருக்கிறது. ஆனால் அவை அழகாக இருக்கிறது என நினைக்கிறேன். எனது பேச்சை இப்போது துவங்கலாமா ? எனது பேச்சு மிகவும் குறுகியதாக இருக்கும் என உறுதியளிக்கிறேன். அனைவருக்கும் நன்றி. நான் எனது நண்பர்களான தேஜஸ், அகரம், மரூப் மற்றும் அஷீ உடன் இங்கிருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது என்னைப் பற்றி கூறுகிறேன். எனது அழகிய கன்னங்களைத் தவிர, எனது நன்றியுணர்வுக்கும், வீரத்திற்காகவும் பதக்கம் பெற்றிருக்கிறேன் என யாருக்காவது தெரியுமா ? இதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால், எனது உரையாடலுக்கு வலுசேர்க்கும் என நம்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அடிக்கடி உடற்பயிற்சி பந்துகளையும் தட்டுகளையும் வைத்து விளையாடிக் கொண்டிருப்பேன். நல்ல விளையாட்டுப் பொருள்களல்லவா ? இது எனது ஓய்வு நேரங்களில் மட்டும். எனது வேலை நேரங்களில், எச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் இருந்து கண்காணிப்பேன். நான் பின்பற்றும் வழி இதுவாகும். நான் இதனைக் கடைபிடித்து பிறருக்கும் எடுத்துக்காட்டாக இருந்து வழிநடத்துவேன். சுருங்கக் கூறினால் " இது எனது தேசம் இதனை நான் பாதுகாப்பேன் ". இதற்குப் பதிலாக, என்னுடைய தேவை என்னவென்றால் சில ரொட்டிகளும், தின்பதற்குச் சுவையான தின்பண்டங்களும்தான். நான் எளிதாக சமாதானமடைவேன், அப்படித்தானே ? முடிவாக, ஒரு அன்பான, வீரமான மற்றும் நம்பிக்கையான தோழன் உங்களது குழுவிற்கு பிரதிநிதியாக வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், மற்றவர்களைப் பார்க்காமல் எனக்கு வாக்களியுங்கள். நாம் மகிழ்வோடிருப்போம் என உறுதியளிக்கிறேன். இனிய நாளாகட்டும்! நன்றி!



### திரு. ஒட்டகத்தின் சொற்பொழிவு:–


அனைவரும் கவனிக்கவும், இங்கே நானிருக்கிறேன். மன்னிக்கவும், உங்களைக் காக்க வைத்ததற்கு, நான் இப்பொழுதுதான் தார் பாலைவனத்தில் எனது இரண்டாவது பயணத்தை முடித்து இங்கே வந்தேன். நான் சோர்வடைந்து விட்டேன் என யார் கூறியது. நான் எனது உரையாடலைத் தயாராக வைத்திருக்கிறேன்; நீங்கள் அதனை விரும்புவீர்கள் எனத் தெரியும். எனது பெயர் 'அஷீ'.

நான் வரும் வழியில் சில பகுதிகளை இக்குறிப்பில் தயார் செய்திருந்தேன். நான் தொடங்கலாமா ? சரி நான் இப்போது ஆரம்பிக்கிறேன். முதலில் நான் மிகவும் பொறுமையானவன் மற்றும் தீர்மானமாக முடிவெடுப்பவன். காற்றோட்டமில்லாத வெப்பம் மற்றும் தூசிப்புயல்களில் நீண்ட மைல்கள் தூரம் சோர்வடையாமல் நடக்க இயலும் எனக் கேட்டால் அதில் நான்தான் முதன்மையானவன். எவ்வித காரணமும் இல்லாமலா என்னை " பாலைவனத்தின் கப்பல் " எனக் கூறுகின்றனர் ? காரணம் சரிதானே ! அதோடு, என்னுடைய தோல் மிகவும் கடினமானது. இதற்கு என்ன அர்த்தம் எனத் தெரியவில்லை. ஆனால், எனது அம்மாதான் இதனைக் குறிப்பிடச் சொன்னார். நேற்று நடைபெற்ற சொற்பொழிவில் அம்மா எனக்கு நிறைய உதவி புரிந்தார். நீங்கள் பார்த்தீர்கள் அல்லவா. Love you அம்மா!

ம்ம்..... வேறு என்ன ? ஆமாம் !..... எனது திமில், திமில்.... என்னுடைய அன்பான திமில். திமில் எனது தொட்டி, எனது சேமிப்பகம், எனது களஞ்சியம் எனது அனைத்து தேவைக்குமான ஒரே ஆதாரம். உங்களால் இதைப் போன்ற ஒன்றை வளர்க்க இயலாது என எனக்குத் தெரியும். ஆனால் முக்கியமான பொருள்களை சிறிதுசிறிதாக அனைவராலும் சேமிக்க இயலும் தானே, உங்களால் முடியாதா என்ன ? அதுதான் உங்களுடைய திமிலாகப் போகிறது. அதன் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்வீர்கள்.

நான் ஏதாவது மறந்தேனா ? அப்படி ஒன்றும் இல்லை என நினைக்கிறேன். ஓ..! பொறுங்கள் எப்பொழுதெல்லாம் நான் வேலையில்லாமல் இருக்கிறேனோ அப்பொழுது உங்களுக்கு மணலில் நடப்பது பற்றி கற்றுத் தருகிறேன். நானும் எனது நண்பர்களும் பாலைவனச்சோலையில் இவ்வாறு செய்வதை விரும்புவோம். மிகவும் வேடிக்கையாக இருக்கும். ஆனால் இது ஒரு இரகசியம். நான் அனைவருக்கும் இதைச் சொல்ல இயலாது. எனக்கு வாக்களியுங்கள் நான் இந்த இரகசியத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். சென்று வருகிறேன்.

### திரு. நாய்:



**நாய்:** வீட்டில் வளர்க்கப்படும் ஊனுண்ணும் பாலூட்டி. இதற்கு வாசனை அறியும் திறன் உண்டு மற்றும் குரைத்து ஊளையிடும். நாய் வகையில் 340க்கு மேலான இனங்கள் உண்டு.

**உங்களுக்குத் தெரியுமா ?**

நாய்கள் நமது உணர்வுகளைத் தெரிந்து கொள்ளும். உங்களது பயம், கோபம், மகிழ்ச்சி மற்றும் சோகம் போன்ற உணர்ச்சிகளை நாய்கள் உணர்ந்து கொள்ளும்.




**குறிப்பு:–** ஒருங்கிணைப்பாளரும் உறுப்பினர்களும் சுவரை தினமும் கண்காணித்தல் வேண்டும். அரசியல் அமைப்புகள் மற்றும் அவ்வமைப்பினை ஆதரிக்கும் மக்களால் அச்சுவர் சேதமடைந்திருந்தாலோ, சுவரொட்டிகளை ஒட்டியிருந்தாலோ பள்ளியின் உறுப்பினர்கள் அத்தகையவற்றை உடனடியாக நீக்க வேண்டும்.

### சுவர் இதழுக்கான மையக் கருத்துகள்

**சுவர் இதழுக்கான மையக் கருத்துகள் பின்வருவன:–**

1. **குடியரசு: மக்களின் அரசு, மக்களால், மக்களுக்காக.**
2. **எனது வாக்கு எனது உரிமை**
   - வாக்கின் மதிப்பு
3. **தேர்தலுக்குட்பட்ட வாக்குகள் அனைத்தும் சமமான மதிப்புடையதே.**
4. **வாக்காளராகப் பதிவு செய்தல்**
   - 18 ஆண்டுகள்–தகுதியான வயது
   - வாக்காளர் பட்டியல்
5. **வாக்காளர் அடையாள அட்டை / என்னுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை**
6. **தேர்தலில் யாரெல்லாம் போட்டியிடலாம் ?**
   - தேவையான தகுதி
   - வேட்பாளராவதற்கான படிநிலைகள்
7. **நேர்மையான மற்றும் தெளிவான வாக்களிப்பு**
   - தேர்தல் பரப்புரையில் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்
   - தேர்தல் நடத்தை விதிகள் : வேட்பாளரின் தவறான நடவடிக்கைகள் குறித்து யாரிடம் புகாரளிப்பது ?
8. **மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்** (Electronic Voting Machine(EVM)) **மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி** (Voter Verifiable Paper Audit Trail (VVPAT))
   - இரகசிய வாக்களிப்பு
   - மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் / வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி வாயிலாக செயல்படுத்தப்படும் தேர்தல் முறைகளின் மீதான நம்பகத்தன்மை
9. **இவர்களில் எவருமில்லை**
   - (None of the above (NOTA)) நோட்டாவை எப்பொழுதெல்லாம் உபயோகிக்கலாம்.
   - உங்கள் வேட்பாளரைக் குறித்த முக்கிய தகவல்களை அறிந்திருத்தல்.
10. **இந்தியத் தேர்தல் ஆணையம் எதிர்– மாநிலத் தேர்தல் ஆணையம் / தேசிய வாக்காளர் தினம்**



## செயல்பாடு : பட்டியல் தயாரித்தல் (Soochi ki Tayaari)

### கண்ணோட்டம்

தேர்தல் பள்ளியின் முறையான முதல் செயல்பாடு தேர்தல் பள்ளியின் உறுப்பினர்களின் பட்டியலைத் தயாரித்தல் மற்றும் தொடர்புடைய தொகுதியின் வாக்காளர் பட்டியலுடன் ஒப்பீடு செய்தல்.

**பங்கேற்பாளர்கள் :** 14 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i) வாக்காளர் பட்டியல் என்றால் என்ன ?

ii) வாக்குச்சாவடி அளவிலான அலுவலர்களின் பணி என்ன ?

iii) வாக்காளராகப் பதிவு செய்வதன் அவசியம்.

### ஆதாரங்கள்

i) மாதிரி வாக்காளர் பட்டியல்

ii) விளையாட்டு– வாக்காளர் பெயர் பதிவு முகாம் (Matdaan ke Padaav)

### தேவைப்படும் பொருட்கள்

i) எழுதுகோல் / பென்சில்

**கால அளவு :** 15 நிமிடங்கள்



### முறை

1. தேர்தல் பள்ளிப் பாடல் வருகை தந்திருக்கும் அனைவராலும் பாடப்பட்டு **தேர்தல் பள்ளி தொடங்கப்படவேண்டும்.** பாடல் கரும்பலகையில் அனைவருக்கும் தெரியும் வகையில் எழுதப்பட்டு இருக்கவேண்டும்.





### உங்களுக்குத் தெரியுமா ?

முயல்குட்டி ஆங்கிலத்தில் “kit” எனப்படுகிறது. பெண் முயல் “ doe” எனவும், ஆண் முயல் “buck” எனவும் அழைக்கப்படுகிறது. முயல் கூட்டம் “Herd” எனப்படுகிறது.

### திருமதி. முயலின் சொற்பொழிவு:–


வணக்கம் நண்பர்களே! வாவ், ஒரு சின்னத்திற்கான பரப்புரை! இது நன்றாக இருக்கிறது. என்னைப் போல சிறிய உருவமுடைய ஒருவர் உங்கள் அனைவருக்கும் பிரதிநிதியாக இருப்பேன் என நினைத்தே பார்க்கவில்லை. ஆனால் எனக்கு வயதாவதற்குள், அர்த்தமுள்ள ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என நினைத்திருந்தேன். எனது பெயர் ‘மரூப்’.

உண்மையாக, பக்ஸ் பென்னி (Bugs Bunny) தான் என்னை இதில் பங்கேற்கத் தூண்டினார். நானும் இதை ஏன் ஒருமுறை முயற்சிக்கக் கூடாது என நினைத்தேன். நாங்கள் மிகவும் சிறியதாக, மிருதுவான பாலூட்டியாக இருந்தால் என்ன? நாங்கள் அதிக திறமையானவர்கள் சுறுசுறுப்பானவர்கள் மற்றும் அதிர்ஷ்டமானவர்கள். நாங்கள் மாமிச உண்ணிகளுக்கு கடுமையான போட்டியாளராக இருப்போம் என்பதில் துளியும் சந்தேகமில்லை. அவர்களால் அவ்வளவு எளிதாக எங்களைப் பிடிக்க இயலாது. மேலும் நாங்கள் பெரிய கூட்டத்தைச் சேர்ந்துள்ளோம். இது எனது குடும்பம். நாங்கள் ஒன்றாகவே இருப்போம்.

பொதுவாக, நான் பகலில் காட்டில் விரைவாகத் துள்ளித் திரிவதை விரும்புவேன். ஆனால் இரவில் எனது பொந்தில் குடும்பத்துடன் விருந்து உபசரிப்பு நடத்துவோம். எனவே, நான் வெற்றி பெற்றாலும், இல்லாவிட்டாலும் எனது வீட்டிற்கு நீங்கள் அனைவரும் வரவேண்டும். நீங்கள் ஒருமுறை எங்களுடன் சேர்ந்துவிட்டால், உங்களுக்கு உண்மையாகவே மகிழ்ச்சியான தருணமாக அமையும் என உறுதியளிக்கிறேன்.

இறுதியாக, துணிகரமான செயல்களை நீங்கள் விரும்பினால், எங்களைப்போல் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை விரும்பினால் கேரட்டுகளை மறவாதீர்கள்! ஆம்.. நான் எப்படி கேரட்டை மறந்தேன், நீங்கள் சென்று எனக்கு வாக்களியுங்கள். அதுவரை, வேகமாக துள்ளித் திரியலாம்.

### திரு. ஒட்டகம்



**ஒட்டகம்** பெரிய, நீளமான கழுத்தையுடைய பாலைவனத்தில் வாழும் பாலூட்டி. இதற்கு நீளமான, ஒல்லியான கால்களும், பரந்த மிருதுவான பாதங்களும் மற்றும் முதுகில் ஒன்று அல்லது இரண்டு திமில்களையும் கொண்டது.

### உங்களுக்குத் தெரியுமா ?

ஒட்டகத்தின் திமிலில் கொழுப்பு சேகரிக்கப்பட்டிருக்கும், தண்ணீர் அல்ல.

## திரு. எருமை மாடு



**எருமை:–** தெற்கு ஆசியா, தென் கிழக்கு ஆசியா மற்றும் சீனாவில் தோன்றிய மிகப் பெரிய உருவத்தை உடைய விலங்கு. இது வீட்டு விலங்காக 5000 ஆண்டுகளுக்கு முன்பு பழக்கப்படுத்தப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா ?**

ஆபத்துக் காலங்களில் இவ்விலங்கு சராசரியாக ஒருமணி நேரத்திற்கு 30 மைல்கள் வேகத்தில் ஓடும்.

**திரு. எருமையின் சொற்பொழிவு:–**

அனைவருக்கும் வணக்கம், இங்கே அனைவருக்கும் என்னைப் பற்றித் தெரியும் அல்லவா ?


இருந்தாலும் நானே கூறுகிறேன். நான் கரடுமுரடான, கடினமான, மிகவும் கோபப்படுகிறவன். ஆனால், இவை மட்டுமே என்னைக் குறித்ததல்ல. நான் வித்தியாசமானவன் என்பதால் தனித்து விடப்படுவேன். எடுத்துக்காட்டாக, சுவையான பச்சைப்புல்களை மென்று பல மணி நேரங்கள் அசை போடுவது எனக்கு பிடிக்கும். இது என்னை ஆரோக்கியமாகவும், நலமாகவும் வைத்திருக்கும். இச்செயல் எனது தசைகளுக்கும் என்னை வலிமையானவனாகவும் மாற்றுகிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் எப்பொழுதும் தனிமையாக இருக்க விரும்புவது போலத் தோன்றும், ஆனால் நீர்நிலைகளில் இருக்கும் போது அனைவருடனும் உரையாடலில் கலந்திருப்பேன். ஆனால் நான் கோபமடையும் போது, எனது இரண்டு பெரிய கொம்புகளைக் காட்டி மிரட்டி திகிலுறச் செய்வேன். இது எனது கெட்ட பழக்கம். எனது அந்தப் பழக்கத்தை பார்க்க விரும்ப மாட்டீர்கள் அல்லவா ? நானும் அவ்வாறுதான். சமூகமாக எவ்வித சிக்கல்களும் இல்லாமல் இருப்பதே எனது விருப்பம். அனைவரும் அதனைத் தான் விரும்புகின்றனர்.

உங்களது வகுப்பறைக்கு சக்திவாய்ந்த வலுவான மற்றும் திடமான சின்னம் தேவைப்பட்டால், எனக்கு ( எனது பெயரான **அக்ர**மிற்கு) வாக்களியுங்கள்.

உங்களை ஒருபோதும் ஏமாற்றமாட்டேன் என உறுதியளிக்கிறேன். வருகிறேன்.

## திருமதி. முயல்



**வீட்டு விலங்கான முயல்** நட்பான, மிருதுவான, பொந்துகளில் வாழும் தாவரம் உண்ணும் பாலூட்டியாகும். இதற்கு நீளமான பின்னங்கால்கள், காதுகள் மற்றும் சிறிய வாலுண்டு.





2. ஒருங்கிணைப்பாளர் வருகை தந்திருக்கும் அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்று, தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர், தேர்தல் பள்ளியின் நோக்கம் மற்றும் ஆண்டு முழுவதும் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.
3. தேர்தல் பள்ளி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப, உறுப்பினர்களை 2 முதல் 4 குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் ஓர் உறுப்பினரைத் தெரிவு செய்து, அவர் அக்குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்களின் பெயர்களை எழுத வேண்டும். அவர் ( ஆண் / பெண் ) வாக்காளர் பட்டியலில் தனது பெயரை முதலில் சேர்க்க வேண்டும்.
4. தேர்தல் பாடசாலையின் முதல் உறுப்பினர் பட்டியலைத் தயாரித்து, அதனை சுவரில் / கரும்பலகையில்/அறிவிப்புப் பலகையில் ஒட்ட வேண்டும். புதிய உறுப்பினர்கள் இணையும் நேர்வில், உறுப்பினர் பட்டியல் மாற்றப்பட வேண்டும். பள்ளியின் அமர்வுக்கு வருகிற எவரும் தேர்தல் பள்ளியின் உறுப்பினராவர்.
5. தயாரிக்கப்பட்ட பட்டியல், சுவரில் ஒட்டப்பட்ட பிறகு, வாக்குச்சாவடி நிலை அலுவலர் முன்னே வந்து, தேர்தல் பள்ளி உறுப்பினர்களுக்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, அவரின் கடமைகளான தனது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியின் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தம், பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் குறித்து விளக்கமளிக்க வேண்டும்.
6. வாக்காளர் பட்டியலின் நோக்கம் குறித்து உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.
7. குழு செயல்பாடுகள் துவங்குவதற்கு முன் ஒவ்வொரு குழுவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர், வாக்குச் சாவடி நிலை அலுவலருடன் இணைந்து பணியாற்றுதலைக் குறித்து தெரிவித்தல் வேண்டும்.
8. அடுத்த செயல்பாடான ‘மாதிரித் தேர்தலுக்கு’ குழுவினரின் பட்டியல், வாக்காளர் பட்டியலாகப் பயன்படுத்த வேண்டும். உறுப்பினர்கள் வாக்களிக்கும் பொருட்டு வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்.
9. **தேர்தல் பள்ளி முடிவடையும்பொழுது,** ஒருங்கிணைப்பாளர் சுவரில் ஒட்டப்பட்ட உறுப்பினர்களின் பட்டியலை எடுத்து அதனை ஆவணமாக வைக்க வேண்டும்.
10. இந்தச் செயல்பாட்டினைத் தொடர்ந்து வாக்காளர் பெயர் பதிவு என்ற விளையாட்டு நடைபெறும்.
11. ஒருங்கிணைப்பாளர் விளையாட்டுடன் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை விவரித்து அனைத்து உறுப்பினர்களையும் இவ்விளையாட்டில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்த வேண்டும்.

**12. 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்:** செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப் படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் வெவ்வேறு நபர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
- மனதில் வைத்து கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
- எந்த **ஒரு** செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்).





செயல்பாடு : தேர்தலை உருவகப்படுத்திய மாதிரி வாக்களிப்பு (Model Matdaan: Election Simulation)

### கண்ணோட்டம்

இச்செயல்பாடு அனைத்து மக்களையும் வாக்களிக்கும் செயல்முறைகளுக்கு பழக்கப்படுத்துவதன் மூலம் தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்கும் பண்பாட்டை ஊக்கப்படுத்துவதாக அமையும்.

**பங்கேற்பாளர்கள்:** தேர்தல் பள்ளியின் அனைத்து உறுப்பினர்களும்

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i) வாக்களிப்பதற்கு வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு.

ii) வாக்குச்சாவடியின் உட்புறம் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து அறிதல்

iii) வாக்களிப்பதில் இரகசியம் காத்தலின் முக்கியத்துவத்தை உணர்தல்

iv) வாக்குகள் எவ்வாறு எண்ணப்படுகிறது என்பது குறித்த விழிப்புணர்வு.

### ஆதாரங்கள்

i) சின்னம் குறித்த பரப்புரை ( பக்கம் 57–61 )

ii) வாக்குச் சீட்டுகள் ( பக்கம் 62,74)

iii) வாக்காளர் பட்டியல் ( பக்கம் 56 )

### தேவைப்படும் பொருட்கள்

i) சுவரொட்டிகள் (தேவைப்படின்)

ii) வாக்குப்பெட்டி

iii) மூடும் திரைகள்

iv) சான்றிதழ்

**கால அளவு :** 45 நிமிடங்கள்

### தயாரிப்பு


1. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் வாக்குப்பெட்டி ஒன்றினைத் தயாரிக்க வேண்டும். காலணி வைக்கும் பெட்டி ஒன்றின் பக்கத்தை வெட்டி வாக்குப்பெட்டியாக உபயோகிக்கலாம்.
2. உறுப்பினர்கள் விளக்கப்படத்தில் கொடுத்துள்ளவாறு வாக்குச்சாவடியினை அமைக்க வேண்டும்.
3. வாக்களிக்கும் பகுதியானது, வாக்காளர் வாக்களிப்பதை யாரும் பார்க்க இயலாத வகையில் அமைக்கப்பட வேண்டும். இதற்காக, ஓர் அட்டையினை மூன்றாக மடித்து வாக்குப் பெட்டியினைச் சுற்றி மறைக்கும் வகையில் வைத்தல் வேண்டும்.
4. மாதிரித் தேர்தலில் வாக்குச் சீட்டில் உறுப்பினர்கள் வாக்களித்தாலும் கூட, பொதுத்தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலம் வாக்களிக்கும்போது அவர்களின் வாக்கானது







## திரு. குதிரை



**குதிரை** கடினமான குளம்புகள் கொண்ட கால்களையுடைய தாவரம் உண்ணும் பாலூட்டி. இது பிடரி முடியும், வாலும் கொண்டது. குதிரை பயணிப்பதற்கும், பந்தயத்திற்கும் மற்றும் பளுவைத் தூக்கி/இழுத்துச் செல்வதற்கும் பயன்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா ?**

குதிரைக் கூட்டத்தில் அனைத்து குதிரைகளும் ஒரே சமயத்தில் உறங்குவதில்லை. அதில் ஒன்றாவது மற்ற குதிரைகளைக் கண்காணிக்க விழித்திருக்கும்.

**திரு.குதிரையின் சொற்பொழிவு:–**

இது பறக்கும் வண்டியா ? விரைவு ரயிலா ? இல்லை – இது நான்தான் – (எனது பெயர்) தேஜஸ், குதிரை – உங்களின் சிறந்த நண்பன்.

நீங்கள் அனைவரும் நினைத்தபடியே, நான் மிக வேகமான, 4 கால்களையுடைய (ஆம், நான் மற்ற விலங்குகளைப் போல கால் பாதங்களைக் கொண்டிராத கால்களைக் கொண்டுள்ளேன்) விலங்கு. எனது பெரும்பாலான நேரங்களை குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்ள பயிற்சி எடுப்பதில் செலவழிக்கிறேன். நீங்கள் என்னை களத்தில், இறுதிக்கோட்டை நோக்கிப் பாய்ந்து செல்வதையும் மற்றும் தொடங்கிய இடத்திற்கே திரும்பிச் செல்வதையும் பார்த்திருப்பீர்கள். இதுதான் எனது தினசரி வேலை.

" நான் பயிற்சி செய்கிறேன். நான் செயல்படுகிறேன் ". இது எனது கொள்கை. இதில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனது விருப்பமான நிகழ்ச்சி விளையாட்டு போட்டி. பல வருடங்களாக எனது திறமைகளை மேம்படுத்தி வருகின்றேன். என்னைப் பொறுத்தவரை, நான் மிகச் சிறந்த முறையில் முன்னிலையில் இருப்பதே முக்கியம். உங்களுடைய வகுப்பின் சின்னமான என்னுடன் இணைந்து நீங்களும் சிறந்தவராக இருக்க முடியும் என நினைக்கிறேன். நான் வேகமாகச் செயல்படுவதற்கு, திட்டமிடப்பட்ட ஆரோக்கியமான உணவுகளான தானியங்கள், வைக்கோல், புல் முதலியன தேவைப்படுகின்றன. ஒழுக்கமாகவும், தீர்மானத்துடனும், கடினமாக உழைத்தால் உங்களுடைய இலக்கினை அடையலாம். நீங்களும் முதலாவதாக வரலாம்.

உங்களது வகுப்பறையும், என்னைப்போல் போட்டி நிறைந்த மற்றும் போராடும் தன்மையுடையதாக வேண்டுமென நீங்கள் கருதினால், நான், தேஜஸ் உங்களது சின்னமாக இருப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நன்னாளாகட்டும் ! (Have a Neigh day!) (மகிழ்ச்சிக் கணைப்பு)

### மாதிரி வாக்காளர் பட்டியல் (மதான் மாதிரி)

| வாக்காளர் பட்டியல் | | | |
|---|---|---|---|
| தேர்தல் பள்ளி (வாக்குச் சாவடியின் பெயர்) | | | |
| தொ.எண். | பெயர் | இனம் | கையெழுத்து |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |





அவ்வியந்திரத்தில் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்பதை உறுப்பினர்களிடம் தெரியப்படுத்த வேண்டும்.

5. பள்ளியின் முதல் அமர்வில் தயாரித்த வாக்காளர் பட்டியலைத் தற்காலிக அறிவிப்புப் பலகையிலோ அல்லது சுவரிலோ ஒட்ட வேண்டும்.


**குறிப்பு:–** வாக்குப்பெட்டி காலியாக உள்ளதை உறுப்பினர்கள் அனைவரிடமும் காண்பிக்காமல் மேற்புறத்தை மூடக்கூடாது. வாக்களிக்கும் திரைக்குப் பின்னால் ஒரு பென்சிலை மட்டும் வைத்து விட்டுவர வேண்டும்.

### முறை

6. தேர்தல் பள்ளிப் பாடல், வருகை தந்திருக்கும் அனைவராலும் பாடப்பட்டு தேர்தல் பள்ளி தொடங்கப்படவேண்டும். பாடல் கரும்பலகையில் அனைவருக்கும் தெரியும் வகையில் எழுதப்பட்டு இருக்கவேண்டும்.

7. தகவல் தொகுப்பில் வாக்குச்சீட்டு சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் "நோட்டா" என்பது "இவர்களுள் எவரும் இல்லை" என்றும், இதனை ஒரு விருப்பமாகப் பயன்படுத்தலாம் என்றும் உறுப்பினர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

**மாதிரி வாக்குச் சாவடி**




**குறிப்பு :** இந்த நிலையில் குழுவினர்களிடம், உண்மையான வாக்குச் சீட்டில் வேட்பாளர்களின் பெயர் அகர வரிசைப்படி அமைக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்க வேண்டும், இவ்வாறு செய்யப்படுவதற்கு காரணம், அனைத்து வேட்பாளரும் சமமானவர்கள் என்பதும், எந்தவொரு

வேட்பாளரும் மற்றொருவருக்குத் தாழ்ந்தவரல்ல என்னும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் செயல்முறைப்படுத்தப்படுகிறது என்பதனை உறுப்பினர்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

8. உறுப்பினர்களுக்கு எவ்வாறு வாக்குச்சீட்டினை மடிக்க வேண்டும் என்பது குறித்து செயல் விளக்கம் அளிக்க வேண்டும். (அதன் அகலத்தில் மடிக்க வேண்டும். அதனால் வாக்குச் சீட்டில் ஒரு வேட்பாளரின் (பெயர் எதிரே) இடப்பட்ட குறியீடு மற்றொரு வேட்பாளரின் பெயரில் தற்செயலாக பிரதியாகாது)

## பரப்புரை

9. தேர்தல் பள்ளிக்கான சின்னத்தை, வாக்களிப்பு முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும் என உறுப்பினர்களிடத்தில் தெரிவிக்க வேண்டும்.

10. இச்செயல்பாட்டின் தகவல் தொகுப்பில் (பக்கம் 73) உள்ள சின்னங்களை உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

11. உறுப்பினர்கள், 2 முதல் 4 சின்னங்களைத் தெரிவு செய்யவேண்டும். மூன்று முதல் ஐந்து தன்னார்வலர்களை அழைத்து ஒரு சின்னத்திற்காக பரப்புரை மேற்கொள்ளச் செய்யவேண்டும். தன்னார்வலர்களுள் பெண்களும் இடம் பெற்றிருக்க வேண்டும், மாற்றுத் திறனாளர் இடம் பெறுவதை ஊக்கப்படுத்த வேண்டும்.

12. தன்னார்வலர்கள் அனைவரும் பரப்புரை குறித்த பின்வரும் விதிகளை அறிந்திருக்கிறார்கள்:–
    - எவ்வகையிலேனும் கட்டாயப்படுத்தியோ, அச்சுறுத்தல் மூலமாகவோ, உண்மைக்குப் புறம்பான முறையீடுகள் மூலமாகவோ வாக்களிக்கச் செய்வது அனுமதிக்க இயலாது.
    - பொதுச்சொத்தை சேதப்படுத்த அனுமதி இல்லை.
    - இடையூறு மற்றும் தொல்லைகள் – எடுத்துக்காட்டாக, அதிக சத்தத்தில் அறிவிப்பு செய்தல், தவறான நடத்தை மற்றும் சுற்றுப்புறத்தை அசுத்தம் செய்தல் போன்ற செயல்பாடுகளுக்கு அனுமதி கிடையாது.
    - இலஞ்சம் கொடுக்கக்கூடாது.
    - பாகுபாடு அடிப்படையில் ஆதரவைப் பெறக்கூடாது
    - வாக்காளர்களிடையே தவறான தகவல்களை உருவாக்கக் கூடாது.
    - பொது இடங்களில் பிற வேட்பாளர்களை அவமதிக்கும் வகையிலான நிகழ்வுகளை அனுமதிக்கக் கூடாது.

13. தவறான வழிமுறைகளைக் கடைபிடிப்பதைக் கண்டறிந்தால், அவ்வேட்பாளர் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

14. தன்னார்வலர்களை ஒவ்வொரு நபராக அழைத்து, வேட்பாளர்களின் சின்னங்களுக்கு வாக்களிக்கும்படி சுருக்கமாக உரையாற்றிச் சொல்லி அவர்களை ஊக்குவிக்கலாம்.



## தகவல் தொகுப்பு

### சுவர் பத்திரிக்கை: முதல் பத்திரிக்கையின் மாதிரி வடிவம்


### சுவர் இதழ் மாதிரி.2

**தலைப்பு : வாக்காளராகப் பதிவு செய்தல்**

<table>
<tr>
<td>
<ul>
<li>வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்வதற்குத் தகுதியான வயது 18 ஆகும்.</li>
<li>தகுதி நாள்: நடப்பு ஆண்டின் ஜனவரி மாதம் முதல் நாள் (01st of January)</li>
<li>பதிவு செய்வதற்கான படிவம்: படிவம் எண்.6</li>
<li>பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள்–இணைய வழி நேரடிப் பதிவிற்கு மற்றும் படிவம் தரவிறக்கம் செய்ய www.nvsp.in- என்ற இணைய தளத்தைப் பயன்படுத்தலாம்.</li>
</ul>
</td>
<td>


</td>
</tr>
<tr>
<td>அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், இந்தியாவில் வாக்காளராகப் பதிவு செய்ய எந்த படிவத்தை நிரப்ப வேண்டும் ?</td>
<td>தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அடுத்த கூட்டம் நடைபெறும் நாள்.......................................<br>நேரம்......................................<br><br>வாக்குச் சாவடி நிலை அலுவலர் தொலைபேசி எண்.<br><br>ஒருங்கிணைப்பாளரின் தொலைபேசி எண்.</td>
</tr>
</table>

**குறிப்பு:** ஒருங்கிணைப்பாளரின் வழிகாட்டலுடன், சுவர் இதழின் அனைத்து உள்ளடக்கங்களையும் தேர்தல் பள்ளியின் உறுப்பினர்கள் உருவாக்க வேண்டும்.



## தகவல் தொகுப்பு

### சுவர் பத்திரிக்கை: முதல் பத்திரிக்கையின் மாதிரி வடிவம்

### சுவர் இதழ் மாதிரி 1

**தலைப்பு :** மக்களாட்சி

| | |
|---|---|
| • மக்களாட்சி:– மக்கள் அரசு, மக்களால், மக்களுக்காக,<br>• மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கலாம் |  |
| இந்தியாவில் வாக்காளராவதற்கு தேவையான தகுதிகள் என்ன ? | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அடுத்த கூட்டம் நடைபெறும் நாள்......................................<br>நேரம்......................................<br><br>வாக்குச் சாவடி நிலை அலுவலர் தொலைபேசி எண்.<br><br>ஒருங்கிணைப்பாளரின் தொலைபேசி எண். |

**குறிப்பு:** ஒருங்கிணைப்பாளரின் வழிகாட்டலுடன், சுவர் இதழின் அனைத்து உள்ளடக்கங்களையும் தேர்தல் பள்ளியின் உறுப்பினர்கள் உருவாக்க வேண்டும்.



15. தன்னார்வலர்கள் அவர்களது உரையை முடித்தபிறகு, வேட்பாளர்கள் பற்றி அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தைக் குறித்து உறுப்பினர்களிடையே ஒருங்கிணைப்பாளர் சில நிமிடங்கள் உரையாற்ற வேண்டும். பின்வரும் பகுதிகளின் அடிப்படையில் ஒருங்கிணைப்பாளர், இவ்விவாதத்தினைக் கொண்டு செல்லலாம்.
    - இவ்வூரின் வேட்பாளர்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா ? (சமீபத்திய தேர்தல்கள் மூலம் சமூக உறுப்பினர்கள் தங்களது தலைவர் மற்றும் வேட்பாளர்களை அறிந்திருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது)
    - வேட்பாளர்களைப் பற்றி அறிந்து கொள்வது எவ்வகையில் உதவுகிறது ?
    - சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய விழிப்புணர்வு உண்டா ?
    - ஒருங்கிணைப்பாளர் இறுதியாக உறுப்பினர்களிடம், வேட்பாளரைக் குறித்து அறிந்து கொள்வது தேர்தலில் தெளிவான முடிவெடுக்கவும், திறமையான தலைமையைத் தேர்ந்தெடுக்கவும் உதவும் எனக் கூறுதல் வேண்டும். எனவே, வேட்பாளர்கள் குறித்த விவரங்களைத் தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகம் அல்லது இணையதளத்தில் கிடைக்கப்பெறும் வேட்பாளரின் உறுதிமொழியின் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஒருங்கிணைப்பாளரும் இது குறித்த தகவல்களை வெளியிடலாம்.

### திட்டமிடல்

16. ஒருங்கிணைப்பாளர் வாக்குப்பதிவு அலுவலர்கள், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் அவர்களின் பணிகள் குறித்து சுருக்கமாக உரையாற்ற வேண்டும்.
17. ஒருங்கிணைப்பாளர் வாக்குச்சாவடி தலைமை அலுவலராக இருந்து அனைத்து செயல்பாடுகளையும் மேற்பார்வையிடுவார்.
18. வாக்குச்சாவடியின் முதல் வாக்குப்பதிவு அலுவலர், வாக்காளர் உள்ளே வந்ததும், வாக்காளரின் பெயர்ப் பட்டியலில் உள்ளதா என்பதைச் சரிபார்ப்பார். அவர் வாக்களித்த பின்னர் அவர் பெயருக்கு எதிரே வாக்களித்துவிட்டார் என்பதற்காக ஒரு குறியீடு செய்வார்.
19. இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலர், வாக்காளரிடம் வாக்குச் சீட்டினை வழங்குவார்.
20. மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர், வாக்காளரின் இடதுகை ஆட்காட்டி விரலில் வாக்களித்ததற்கான அடையாள மையினை வைப்பார்.
21. ஒருங்கிணைப்பாளர், தன்னார்வ உறுப்பினர்களை வாக்குப்பதிவு அலுவலராகச் செயல்பட அழைக்கவேண்டும். உறுப்பினர் எண்ணிக்கை குறைவாக இருக்கும் நேர்வில் ஒரு நபரே இரண்டாவது மற்றும் மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலராகச் செயல்படலாம்.
22. மாதிரித் தேர்தலின்போது அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருப்பின், ஒருங்கிணைப்பாளர், தன்னார்வ உறுப்பினர்கள் சிலரை, வரிசையினை ஒழுங்கு படுத்துவதற்காக பாதுகாப்புக் காவலர்களாகச் செயல்படக் கேட்டுக்கொள்ளலாம்.





23. வாக்களிக்கும் உறுப்பினர்களிடம் வாக்குச்சீட்டை பெட்டியில் இடுவதற்கு முன்னர் வாக்குச்சீட்டில் குறியீடு செய்யவேண்டும் எனவும், அவ்வாறு குறியீடு இல்லையென்றால் அந்த வாக்கு, எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரிவிக்க வேண்டும்.

24. வாக்களிக்கும் உறுப்பினர்களிடம், வாக்குச்சீட்டில் உள்ள நபர்களின் பெயருக்கெதிரே ✓ குறியீடு மட்டும் இடப்பட வேண்டும் என்றும், வேறு எந்தக் குறியீடுகளோ அல்லது பெயர் அல்லது எண்கள் போன்ற குறியீடுகளோ செய்தால், அந்த வாக்கு நிராகரிக்கப்படும் என்றும் அறிவுறுத்த வேண்டும்.

25. வாக்குச்சீட்டில் வாக்காளர்கள் தவறுதலாக, எதிர்பாராதவிதமாக ஏதேனும் குறியீடு செய்து விட்டால், அதற்குப் பதிலாக வேறு வாக்குச் சீட்டு கோரி வாக்குச்சாவடி தலைமை அலுவலரை அணுகலாம்.

26. வாக்களித்த விவரம் குறித்து இரகசியம் காக்கப்படுவது வலியுறுத்தப்பட வேண்டும்.

**வாக்களித்தல்**

27. வாக்குப்பதிவுக்கு முன் வாக்குப்பெட்டி காலியாக உள்ளது என்பதை அனைவருக்கும் தெரியும் வகையில் காண்பிக்க வேண்டும்.

28. பங்கேற்பாளர்களிடம், ஆண்களையும் பெண்களையும் தனித்தனி வரிசையில் நிற்கச் செய்ய அறிவுறுத்த வேண்டும். மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்களுக்கு வரிசையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.



29. ஒரு சமயத்தில் பங்கேற்பாளர் ஒருவர் மட்டும் முதல் வாக்குப்பதிவு அலுவலரை அணுகி, அவரது பெயர், வாக்காளர் பட்டியலில் உள்ளதா என வாக்களிக்கும் திரைக்குப் பின்னால் சென்று சரிபார்க்குமாறு கோர வேண்டும். வாக்குச் சீட்டில் குறியீடு செய்வதற்கு முன்னர் இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலரிடம் வாக்குச்சீட்டினைப் பெறவும், மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலரிடம் அடையாள மையினை தங்கள் விரலில் இட்டுக்கொள்ளவும் பங்கேற்போரிடம் அறிவுறுத்த வேண்டும்.

30. வாக்காளர்கள், வாக்குச்சீட்டினை இரண்டாக மடித்த பின்னர், குறியீடு செய்த தங்களுடைய வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியில் போடவேண்டும்.

31. அனைவரும் வாக்களித்தவுடன், உறுப்பினர்களிடம், வாக்களிப்பு இரகசியம் காக்கப்பட வேண்டும் என்பது குறித்து தெரிவிக்க வேண்டும். அத்துடன் தற்காலத்தில் சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் **வாக்குச்சீட்டிற்குப் பதிலாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்தும்,** அதன் மூலம் எவ்வாறு செம்மையான முறையில் இரகசியமாக வாக்களிக்க இயலும் என்பது பற்றியும் குறிப்பிட வேண்டும்.






# 21. செயல்பாடுகளுக்கான தகவல் தொகுப்புகள்.



5. இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, தேர்தல் நோக்கத்திற்காக, குறிப்பாக தேர்தல் கல்வியறிவு குழுவின் உறுப்பினர்களால், தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படும்.

6. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்** : அனைத்து செயல்பாடுகளும் தனிநபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு நினைவூட்டல் முறையில் பின்பற்றப்பட வேண்டும். ஒருங்கிணைப்பாளர் தேர்தல் பள்ளியிலுள்ள உறுப்பினர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:–

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
- மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
- எந்த **ஒரு** செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)







### வாக்கு எண்ணுகை

32. உறுப்பினர்களில் ஒருவரை அழைத்து வாக்குப்பெட்டியில் போடப்பட்டுள்ள சீட்டுகளை ஒரு மேசையின் மீது பரப்பச் செய்ய வேண்டும்.

33. வாக்குப்பதிவு அலுவலர்களாகச் செயல்பட்ட உறுப்பினர்கள் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அல்லது ஒருங்கிணைப்பாளரின் மேற்பார்வையில் வாக்கு எண்ணுகையை நடத்த வேண்டும்.



34. வாக்குச்சீட்டுகளை ஒவ்வொன்றாகப் பிரித்து பிறகு, ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனியாக குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டுகளை வெவ்வேறு கட்டுகளாக அடுக்க வேண்டும்.

35. கரும்பலகையை 5 பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிரிவும் ஒரு சின்னத்திற்காக ஒதுக்கப்படவேண்டும். (5 உறுப்பினர்கள் கரும்பலகையின் அருகே நின்று வாக்கு எண்ணிக்கையினைக் குறிப்பர்) கரும்பலகைக்கு பதிலாக பெரிய காகிதத்தையோ, அட்டையையோ அல்லது பெரிய மேற்பரப்பையோ பயன்படுத்தலாம். இந்த உத்தி, வாக்கு எண்ணுகையை அனைவரும் அறிந்து கொள்வதற்குப் பயன்படும்.

36. மடித்துப் போடப்பட்ட வாக்குகளைப் பிரித்து பங்கேற்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் காண்பித்து, வாக்களிக்கப்பட்ட வேட்பாளரின் பெயரை அனைவரும் கேட்கும்வண்ணம் படிக்கவேண்டும்.

37. வாக்குச்சீட்டுகளில் நிராகரிக்கப்பட்டவைகளைத் தனியாக அடுக்கி வைத்து, அவற்றை எண்ணிக்கையில் சேர்க்காமல், என்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது என விளக்கமளிக்க வேண்டும்.

38. இறுதியில் அதிக வாக்குகள் பெற்ற சின்னத்தை வெற்றி பெற்றதாக அறிவிக்கவேண்டும்.

39. அச்சின்னத்தை தேர்தல் பள்ளியின் அந்த ஆண்டுக்கான சின்னமாகப் பயன்படுத்த வேண்டும்.

40. **செயல்பாடு 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்:–** ஒருங்கிணைப்பாளர் தேர்தல் பள்ளியிலுள்ள உறுப்பினர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:–

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
- மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
- எந்த **ஒரு** செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)

## செயல்பாடு: அட்டை விளையாட்டு மக்களின் பிரதிநிதியாதல்

### கண்ணோட்டம்:

இந்த அட்டை விளையாட்டு, அரசியல் வேட்பாளர் ஒருவரின் பார்வையிலிருந்து வேட்பு மனு மற்றும் தேர்தல் செயல்முறை வாயிலாக, விளையாடுபவர்களைப் பங்குபெறச் செய்கிறது. ஒரே நேரத்தில் 2லிருந்து 6 நபர்கள் இதில் விளையாடலாம்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

I) வேட்பாளராவதற்கான தகுதி

II) வேட்பு மனு செயல்முறை

III) தேர்தல் நடத்தை விதிகளை அறிதல்

IV) வேட்பாளரின் தகுதியிழப்பு குறித்து அறிதல்

### தகவல் தொகுப்புகள்:

i) அட்டை விளையாட்டுக் கற்றை (Card Game Set)

**கால அளவு: 1 அமர்வு** ( 30 நிமிடங்கள்)

### முறை:

1. யாதொரு வசதியும், வழிகாட்டலும் இல்லாமல், உறுப்பினர்களைக் கொண்டு இந்த விளையாட்டு விளையாடலாம்.
2. விளையாட்டுடன் அதன் விவரங்களும் காணப்படுவதால், உறுப்பினர்கள், இந்த விளையாட்டை எந்நேரத்திலும் விளையாட முடியும். எனினும் இவ்விளையாட்டை 'கிராம சபைக்கு ஒரு பயணம்' என்ற 4–வது செயல்பாட்டிற்கு முன்னர் விளையாடலாம்.
3. விளையாட்டுக்கு முன்னர், ஏற்பாட்டாளர், தேர்தல் வேட்பு மனு மற்றும் தேர்தல் நடைமுறைகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதம் நடத்துவதற்கு அழைப்பு விடுக்கலாம்.





### தயாரித்தல்:

i. உள்ளூர் நாட்டுப்புறக் கலைஞர்களுடன் தொடர்பு கொண்டு தேர்தல் கல்வியறிவுக் குழுவுடன் கூட்டுக் கூட்டம் நடத்துதல்; உறுப்பினர்களும் கலைஞர்களும் கலைவடிவம் வாயிலாக வாக்காளர் கல்வி குறித்த செய்திகளையும்/ கதைகளையும் உருவாக்குவர்.

ii. கலை வடிவங்கள் வட்டார ரீதியாக மாறுபடும். அது நடனம், நாடகம், பொம்மலாட்டம் ஆகியவற்றிலிருந்தும் இராஜஸ்தானின் கவாட்ஸ்(Kavads), குஜராத்தின் வரிலி (warli), ஓவியங்கள், பழங்காலச் சுவடிகள் போன்ற ஏனைய வட்டார வடிவிலான கதை சொல்லுதல் என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

iii. நாடகம், தெருக்கூத்து அல்லது பாடல், இசை நாடகம் முதலியன எதுவாக இருப்பினும் நாட்டுப்புற நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் இயன்ற வரையில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ஈடுபடுத்த முயற்சித்தல் வேண்டும்.

iv. நாட்டுப்புறக் கலைஞர்கள் கிடைக்காத நேர்வில் அவர்கள் இல்லாமலே நிகழ்ச்சிகளை நடத்தலாம்.

v. உறுப்பினர்கள் தகவல் தொகுப்பில் அளிக்கப்பட்டுள்ள கதைக் குறிப்புகளை எடுத்துக் கொள்ளலாம். எனினும் உறுப்பினர்கள் தகவல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை உதாரணங்களாக மட்டுமே எடுத்துக் கொண்டு அவர்கள் சொந்தக் கதைகளை உருவாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். இந்தக் கதைகளை உருவாக்குவதற்கு அவர்களை வழிநடத்தலாம்.


vi. நிகழ்ச்சிகளில் பங்கேற்காத உறுப்பினர்கள், நிகழ்ச்சியின் முக்கியச் செய்திகளை / கருத்துகளை எடுத்துரைக்கின்ற துண்டுப் பிரசுரங்கள் தயாரிப்பதற்கு ஊக்குவிக்கலாம்.

vii. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் அவர்கள் கலையை வெளிப்படுத்தும் இடமாக சமுதாய நிகழ்ச்சி ஒன்றினை இறுதி செய்யலாம். சமுதாய நிகழ்வானது, ஒரு சந்தை அல்லது ஒரு திருவிழா அல்லது ஏதேனும் ஒரு பண்டிகைக் கொண்டாட்டமாக இருக்கலாம்.

### முறை:

1. ஒருங்கிணைப்பாளர் மற்றும் பள்ளி உறுப்பினர்கள், குறிப்பிட்ட இடத்தில் சமுதாய உறுப்பினர்களைக் கூட்ட வேண்டும்.
2. தேர்தல் பள்ளியின் உறுப்பினர்களால் பள்ளியின் பாடலைப் பாடி, சமுதாயக் கூட்டத் தொடரை தொடங்குதல் வேண்டும்.
3. வாக்குச்சாவடி நிலை அலுவலர் அல்லது ஒருங்கிணைப்பாளர் அல்லது தேர்தல் பள்ளியின் உறுப்பினர்களுள் ஒருவர் நிகழ்ச்சிகளைப் பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.
4. உறுப்பினர்கள், பார்வையாளர்களின் முன்னிலையில் நிகழ்ச்சிகளை நடத்துவர்.





3. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி தொடர்பான திரைப்படத்தை ஒருங்கிணைப்பாளர் திரையிட வேண்டும்.

4. திரைப்படம் திரையிட்ட பின்னர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் பயன்பாடு குறித்து பொதுமக்களிடமிருந்து வினாக்களைக் கேட்கலாம்.

5. பிறகு ஒருங்கிணைப்பாளர் மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை எடுத்து அதைப் பயன்படுத்தும் முறை குறித்து விளக்குவார்.

6. செயல்விளக்கத்திற்குப் பின்னர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிப்பது தொடர்பான உறுப்பினர்களின் புரிதலை உறுதிசெய்வதன் அடிப்படையில் உறுப்பினர்களிடம் மறுபடியும் வினாக்களைக் கேட்கலாம்.

7. ஒருங்கிணைப்பாளர் கூட்டத்தொடரின் முடிவில், வாக்குகளைப் பெறுவதற்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்புத் தன்மை, எளிமையாகக் கையாளுதல் மற்றும் முனைப்பான வழிமுறை ஆகியவற்றையும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வாக்கின் இரகசியத் தன்மையைக் காக்கும் என்பதையும் வலியுறுத்துவார்.

8. உறுப்பினர்கள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த துண்டுப் பிரசுரங்களை அனைவருக்கும் வழங்குவர்.

## சமூகச் செயல்பாடு: நாட்டுப்புறக் கலைகள் வாயிலாகக் கதை சொல்லி அறியச்செய்தல்:

### கண்ணோட்டம்

இச்செயல்பாடானது, கதை சொல்லுதல் மற்றும் பாரம்பரிய கலை வடிவங்களைப் பயன்படுத்தி பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த குழு உறுப்பினர்களுக்கு மக்களாட்சியில் ஒவ்வொரு வாக்கின் மதிப்பை உணர்த்தி, அதே சமயம் பதிவு செய்தல் முறை தொடர்பான கற்றலை அவர்களிடம் வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உறுப்பினர்கள் புதுவிதமான கதைகளைக் கூறியும், அவர்களது சமூகத்தின் முன்னிலையில் நடித்தும், தேர்தல் நடைமுறைகளைக் குறித்து கற்பிப்பர்.

**பங்கேற்பாளர்கள் :** சமுதாய மக்களின் முன்னிலையில் நாட்டுப்புறக் கலைகள் வாயிலாக கதைகளை தேர்தல் பள்ளி உறுப்பினர்கள் நடித்துக் காண்பிப்பர்

**முக்கியமாகத் தெரிந்து கொண்டவை :** தேர்ந்தெடுக்கப்பட்ட கதையிலுள்ள கருத்துகள்

**தகவல் தொகுப்பு :** அபை & அபா(Abhay & Abha) – சித்திரக் கதைப் புத்தகம், கதைகள் மற்றும் நிகழ்வுகள் தகவல் தொகுப்பில் வழங்கப்பட்டுள்ளன.







## செயல்பாடு : கிராம சபைக்கு ஒரு பயணம் (Gram Sabha Ki Yatra)

### கண்ணோட்டம்:

உறுப்பினர்களை, தேர்தல் நடைமுறையின் பலன்களையும் உள்ளாட்சி நிர்வாகத்தின் செயல்பாட்டின் மூலம் பிரதிநிதித்துவ மக்களாட்சியை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

**பங்கேற்பாளர்கள்:** தேர்தல் பள்ளியின் உறுப்பினர்கள் அனைவரும்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i) தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்தல்: நமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் ஊடகம்

ii) ஊராட்சியின் தேர்தல் நடைமுறைகளைப் புரிந்து கொள்ளுதல்

iii) பிரதிநிதித்துவ மக்களாட்சி செயல்பாட்டினை அறிந்த பிறகு அதன் முக்கியத்துவத்தை உணர்தல்

### தேவையான பொருட்கள்:

i) குறிப்பேடு மற்றும் பென்சில்

### கள ஆய்வு:

1. இச்செயல்பாடானது, கிராம சபை நடைபெறும் நாளில் நடக்கும்.

2. கிராம சபைக்காக பஞ்சாயத்து கூடுவதற்கு முன்னர் இந்தச் செயல்பாடு குறித்து தேர்தல் பள்ளி உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

3. இந்த ஆய்வின் போது, கிராம சபைக் கூட்டத்தின் நடவடிக்கைகளை உறுப்பினர்கள் கண்காணிப்பர். மேலும் அவர்கள் கிராம சபை உறுப்பினர்கள் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவர்.

### ஆய்விற்கு பிந்தைய விவாதம்:

1. கிராம சபை நடவடிக்கைகள் குறித்த அவர்களது முந்தைய நிகழ்வுகளை நினைவுகூருமாறு கற்பவர்கள் ஊக்குவிக்கப்படுவர். ஒருங்கிணைப்பாளர், செயல்பாட்டில் பங்கேற்பதற்காக சில தன்னார்வலர்களை அழைப்பார்.
2. தன்னார்வலர்கள் 10 நிமிட விவாதத்திற்குப் பின்பு கிராம சபைக் கூட்டத்தில் அவர்கள் கற்றுக்கொண்டதை மீண்டும் செய்து காட்டுவர்.
3. மேற்கூறிய செயல்பாட்டிற்குப் பின்னர், ஒருங்கிணைப்பாளர் தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்களின் அனுபவங்களைப் பகிர்வதற்காக அழைப்பார்.
4. இந்தச் செயல்பாட்டின் மூலம் உறுப்பினர்கள் கிராம சபையின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கும் மக்களின் குறைகளை பிரதிநிதிகள் மூலமாக வெளிக்கொணர்வதற்கான ஒரு மேடையாக எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கும் ஒருங்கிணைப்பாளர் உதவுவார். ஒருங்கிணைப்பாளர் விவாதிக்கக் கீழே கொடுக்கப்பட்டுள்ள முக்கிய கருத்துகளைப் பயன்படுத்தலாம்.
5. இவ்விவாதத்தினை மாநில மற்றும் தேசிய அளவிலான விவாதமாக மாற்றி ஒவ்வொரு வாக்கும் எவ்வாறு நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் என்பதைக் குறித்து விளக்கலாம்.
6. **செயல்பாடு 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்** : ஒருங்கிணைப்பாளர் தேர்தல் பள்ளியிலுள்ள உறுப்பினர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:–
    - இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
    - மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
    - எந்த **ஒரு** செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)
7. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் / வாக்கு எண்ணிக்கை தொடர்பாக 'வாக்குச்சீட்டில் நம்பிக்கை', 'ஜனநாயகத்தின் காவலன்' அல்லது 'சித்திரக்கதைகள்' 'கார்டூன் துண்டு' போன்ற கதைத் தொடர்களில் இருந்து மேற்கூறியவை தொடர்பான துணுக்குகளுடன் கூட்ட அமர்வை நிறைவு செய்யவும்.



## சமூகச் செயல்பாடு: தேர்தல் இயந்திரம் (மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) & வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT)) குறித்து அறிதல்

### கண்ணோட்டம்:

இச் செயல்பாட்டில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி தொடர்பான படம் பார்வையாளர்களுக்குத் திரையிடப்படும். இதன் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் எவ்வாறு செயல்படுகிறது மற்றும் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியின் மூலம் வாக்களித்தலின் ரகசியம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது என்பதைப் பார்வையாளர்கள் கற்றுக் கொள்வர்.

### பங்கேற்பாளர்கள்:

தேர்தல் பள்ளியின் உறுப்பினர்கள் தவிர மற்ற அனைத்து சமுதாய உறுப்பினர்கள்

### கற்றலின் விளைவு:

I. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி குறித்த விழிப்புணர்வு

II. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிப்பது எவ்வாறு என்பது குறித்த தெளிவு

III. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பாதுகாப்பான முறையில் வாக்களித்தல் குறித்து அறிதல்.

### தகவல் தொகுப்பு:

I. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி தொடர்பான திரைப்படம்

II. மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்

III. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த துண்டுப் பிரசுரம்



**தேவையான பொருட்கள்:**

I. திரை, படக்காட்சி இயந்திரம், மடிக்கணினி மற்றும் ஒலிபெருக்கிகள்

### முறை:

1. ஒருங்கிணைப்பாளர் மற்றும் பள்ளியின் உறுப்பினர்கள், தகுந்த இடத்தில் சமுதாய உறுப்பினர்களுடன் கூட்டத்தொடர் ஒன்றை நடத்த வேண்டும்.
2. தேர்தல் பள்ளியின் உறுப்பினர்களால் பாடசாலையின் பாடல் பாடி, சமுதாயக் கூட்டமர்வு துவங்கப்பட வேண்டும்.

**முறை:**

1. அங்கு வருகை புரிந்த அனைவரும் தேர்தல் பள்ளி பாடலைச் சேர்ந்து பாடி கூட்டத் தொடரைத் துவங்க வேண்டும். ஒருங்கிணைப்பாளர், பள்ளி உறுப்பினர்களால் நடத்தப்படும் சமுதாயச் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு தேவையான இடங்களில் பங்கேற்பார்.
2. சமூக உறுப்பினர்களுக்கு தேர்தல் படம் திரையிட்டுக் காட்டப்படும்.
3. சமுதாய உறுப்பினர்களின் உதவியுடன், தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்கள் திடலில் விளையாட்டுவதற்கு வண்ணக் கோடுகளை இடுவர் அல்லது பதாகைகளைத் தரையில் பொருத்துவர்.
4. விளையாட்டின் வரைபடத்தை வரைகையில் தேர்தல் நடைமுறை குறித்த பல்வேறு கூறுகளை அவர்கள் மீண்டும் கற்க வேண்டும்.
5. சமுதாய உறுப்பினர்கள், விளையாட்டுப் போட்டிகளை விளையாடுகையில், வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு மற்றும் வாக்களித்தல் செயல்முறையைக் கற்க வேண்டும்.
6. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்** : அனைத்து செயல்பாடுகளும் தனிநபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு நினைவூட்டல் முறையில் பின்பற்றப்பட வேண்டும். ஒருங்கிணைப்பாளர் தேர்தல் பள்ளியிலுள்ள உறுப்பினர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:–
   - இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
   - மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
   - எந்த **ஒரு** செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள்(உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)
7. வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செயல்முறை குறிப்பாக, படிவம் 6, வாக்குச்சாவடி நிலை அலுவலர், மற்றும் வாக்காளர் பட்டியல் ஆகியவற்றின் முக்கிய கருத்துகளுடன் பள்ளி உறுப்பினர்கள் விளையாட்டை நிறைவு செய்வர்.







**விவாதப் பத்திகள்:**

1. கிராம சபையில் எழுப்பப்பட்ட சிக்கல்கள் என்ன ?
2. யாரால் இச்சிக்கல்கள் எழுப்பப்பட்டது ?
3. இச்சிக்கல்கள் யார் தொடர்புடையது ?
4. பஞ்சாயத்து உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் ? அவர்கள் என்ன செய்தனர் ?
5. பஞ்சாயத்து இல்லையென்றால் மக்களின் குறைகளை வெளிக்கொணர இயலுமா ?
6. நகர மக்கள் எவ்வாறு அவர்களின் குறைகளைத் தெரிவிக்கின்றனர் ? மாநகரத்தில் ? மாநிலத்தில் ? நாடு முழுவதும் ?




## செயல்பாடு : படம் திரையிடுதல் (14லிருந்து 17 வயதுடையவர்களுக்காக) இதனைத் தொடர்ந்து அட்டை விளையாட்டு வாக்காளராகுதல்

### கண்ணோட்டம்

திரைப்படங்கள் / திருப்புத்தாள் (flip chart) வாயிலாக தேர்தல் செயல்முறைகளையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்துதல், பின்னர் அதனை ஆதரிக்கும் விதமாகவும், தேர்தல் நடைமுறை குறித்த தகவல்களைப் பரப்புவதற்காகவும் சித்திரக் கதைகளைப் பயன்படுத்தலாம்.

**பங்கேற்பாளர்கள்:** 14லிருந்து 17 வயதுடைய தேர்தல் பள்ளி உறுப்பினர்கள்

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. வாக்காளராகத் தகுதி பெறும் வயது 18 என அறிதல்

ii. வாக்காளராகப் பதிவு செய்யும் முறைகளை அறிந்து கொள்ளுதல்

iii. வாக்கின் மதிப்பினை உணர்தல்

iv. வாக்குச் சாவடி நிலை அலுவலர் – வாக்காளருடனான முதல் தொடர்பு அலுவலர் மற்றும் தேர்தல் நடைமுறைகளில் அவரின் பணியினை அறிதல்.

### தகவல் தொகுப்பு:

i. அசைவூட்டப்பட்ட குறும்படம் கால அளவு: 12 நிமிடங்கள் (Mast Dosti Matdaan)

ii. அபய் மற்றும் அபா–சித்திரக் கதைப் புத்தகம்

iii. ஜனநாயகத்தின் விரைவு ரயில்–செவிவழிக் கதை (Loktantra Express)

iv. வாக்காளராகப் பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் குறித்த திருப்புத்தாள்

v. விளையாட்டு – varnawali (தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது)

**குறிப்பு:–** படம் திரையிடுதல் சாத்தியமில்லாத தருணங்களில் சித்திரக்கதை புத்தகம், செவிவழிக் கதைகள் மற்றும் திருப்புத்தாள் போன்றவற்றை மாற்றாக உபயோகிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:**

i. திரை, படக்காட்சி இயந்திரம், மடிக்கணினி மற்றும் ஒலிபெருக்கிகள்

ii. குறிப்பேடு, பேனா, பென்சில், அழிப்பான், வண்ண எழுதுகோல்

iii. ஒவ்வொரு உறுப்பினருக்கும் A4 தாள்கள் நான்கு

iv. விளக்க வரைபடத் தாள் (Chart) மற்றும் தடித்த வண்ண எழுதுகோல்

### முறை:

1. வருகைபுரிந்த அனைவரும் தேர்தல் பள்ளியின் பாடசாலை பாடலைப் பாடி கூட்டத் தொடரைத் தொடங்க வேண்டும். உறுப்பினர்கள் அனைவரின் வசதிக்காக அந்தப் பாடல் கரும்பலகையில் எழுதப்பட வேண்டும்.
2. ஒருங்கிணைப்பாளர், பல்வேறு வகைப்பட்ட தலைப்புகளில் கலந்துரையாட உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டும்.
3. இந்திய மக்கள் தங்கள் அரசைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி உறுப்பினர்களிடம் கேட்க வேண்டும். ஏற்பாட்டாளரால் தேர்தல் செயல்முறை குறித்த சுருக்கமான தகவல் அளிக்கப்படும். 'எதிர்காலத்தில் பொறுப்புடைய வாக்காளர்களாக' அவர்களைத் தயார்படுத்தும் நோக்கத்துடன் தேர்தல் தொடர்பான கருத்துகளான "ஒவ்வொரு வாக்கின் மதிப்பு, வாக்காளராகப் பதிவு செய்தல், வாக்களிக்கும் வயது" போன்ற தலைப்புகளில் விவாதிக்கப்படும்.
4. இவ்விவாதத்தினைத் தொடர்ந்து திரைப்படம் / திருப்புத்தாள் அல்லது செவிவழிக்கதைகள் போன்றவற்றை மேற்கொள்ளலாம்.





4. ஓர் ஆரோக்கியமான விவாதத்தின் வாயிலாக மக்களின் உணர்வுகள் மற்றும் அவர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு ஒருங்கிணைப்பாளர் முயற்சிப்பார்.
5. தாயம் : விளையாட்டு குறித்த விவரங்களை விளக்கி, அனைத்து உறுப்பினர்களையும் இதில் பங்கேற்றலை ஒருங்கிணைப்பாளர் உறுதிப்படுத்துவதுடன் இவ்வமர்வு நிறைவு பெறும்.

## சமூகச் செயல்பாடு : பரமபதம் (Snakes and Ladder)

### கண்ணோட்டம்:

இவ்விளையாட்டு தேர்தல் நடைமுறைகளின் முக்கியமான அம்சங்களை எடுத்துக் கூறும்.

**பங்கேற்பாளர்கள்:**

விளையாட்டை நடத்துவதற்கு தேர்தல் பள்ளி உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டை விளையாடுவதற்கு சமுதாய உறுப்பினர்கள்.

**கற்றலின் விளைவு**

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. வாக்காளர் பதிவு செயல்முறை

ii. பெயர் பதிவு செய்வதற்கான படிவம் 6

iii. வாக்காளர் தொடர்பு கொள்வதற்கான உதவி எண் 1800–11–1950.

iv. வாக்காளர் பட்டியலில் பெயரைச் சரிபார்த்தல்

v. வாக்காளர் அடையாள அட்டை

**தகவல் தொகுப்புகள்:**

I) படம் திரையிடுதல் / தொடர் விளம்பரம் (தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது)

II) தேர்தல் நடைமுறை குறித்து 'ஞானம் பெற்ற வாக்காளர்' என்ற தலைப்பில் தாயம் விளையாட்டு

**கால அளவு :** 30 நிமிடங்கள்


**தேவையான பொருட்கள்:**

விளையாட்டுக் கட்டங்களை வரைவதற்கு தேவையான சுண்ணக்கட்டி அல்லது அடர் நிறங்கள்

**தயாரித்தல்:**

விளையாடுவதற்கு ஏதுவாக அங்கன்வாடி மையங்கள், அரசுப்பள்ளி ஆடுகளங்கள், ஊராட்சிக் கூட்ட விளையாட்டுத் திடல்கள் மற்றும் ஏனைய பிற ஆடுகளங்கள்.





**செயல்பாடு: தேர்தல் கதைகள் (Chunav Ki Kahaniyan)– இதனைத் தொடர்ந்து விளையாட்டு அணுகத் தகுந்த மற்றும் தேர்தலைத் தொடர்பு படுத்திய தாயம் விளையாட்டு**

**கண்ணோட்டம்:**

தங்களது வாக்கு உரிமையைப் பயன்படுத்துதல், பதிவு செய்யும் முறை தொடர்பான முக்கியமான தகவலை நுட்பமாகத் தெரிவித்தல், நெறிமுறைக்குட்பட்ட வாக்கு, தேர்தலில் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை; சமுதாயத்தைப் பாதிக்கக்கூடிய பல்வேறு சிக்கல்களை விவாதித்தல் மற்றும் சமுதாய உறுப்பினர்களால் எதிர்கொள்ளப்படும் தடைகள் மற்றும் அத்தடைகளை தகர்ப்பது எவ்வாறு ? என்பன போன்ற தேர்தல் தொடர்பான பல்வேறு கதைகளின் வாயிலாக, உறுப்பினர்களை ஒருங்கிணைப்பாளர் ஊக்குவிப்பார்.

ஒருங்கிணைப்பாளர், தேர்தல் பள்ளி உறுப்பினர்களுடன் கதை கூறுதல் சார்ந்த கூட்ட அமர்வில் கட்டாயமாகப் பங்கேற்க வேண்டும்.

**பங்கேற்பாளர்கள்:** தேர்தல் பள்ளியின் அனைத்து உறுப்பினர்கள்

**கற்றலின் விளைவு**

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. ஒவ்வொரு வாக்கின் மதிப்பை உணர்தல்

ii. நெறிமுறைக்குட்பட்ட மற்றும் தெளிவான வாக்கின் மதிப்பினை உருவாக்குதல்

iii. மக்கள் வாக்களிப்பதற்கு பெரும் ஏற்பாடுகள் செய்தலைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்

**தகவல் தொகுப்பு:**

i. தேர்தலில் நம்பிக்கை (தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது)

ii. ஜனநாயகத்தின் பாதுகாவலன் (தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது)

iii. பரமபதம் விளையாட்டு – அணுகத்தகுந்த மற்றும் உள்ளடங்கிய தேர்தல் (தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது)

**முறை:**

1. அங்கு வருகை புரிந்த அனைவரும் தேர்தல் பள்ளியின் பாடலைச் சேர்ந்து பாடி கூட்டத்தொடரைத் துவங்க வேண்டும். உறுப்பினர்கள் அனைவரின் வசதிக்காக அந்தப் பாடல் கரும்பலகையில் எழுதப்பட வேண்டும்.
2. ஒருங்கிணைப்பாளர் முக்கிய தகவல்களைத் தெரிவிக்கின்ற வகையில் கதை கூறுதல் நிகழ்வை நடத்த வேண்டும்.
3. தலைப்பு தொடர்பான தங்களது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தேர்தல் பள்ளி உறுப்பினர்களை ஒருங்கிணைப்பாளர் அழைக்கலாம்.





5. திரைப்படம் / திருப்புத்தாள் திரையிடுதல் போன்ற செயல்பாடுகளுக்குப் பின்னர் வாக்களித்தலின் முக்கியத்துவம் குறித்த அறிவைத் தூண்டும் வகையிலான கூட்ட அமர்வு நடத்தப்படும்.
6. உறுப்பினர்கள், அவர்கள் பங்கேற்ற அல்லது அவர்களது பெற்றோர்கள் / அண்டை வீட்டாளர்கள் பங்கேற்ற முந்தைய தேர்தலைக் குறித்து அவர்களது கடந்தகால நினைவுகளை உறுப்பினர்களோடு பகிர்ந்துகொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
7. உறுப்பினர்களுக்கு தாள், பென்சில், அழிப்பான், க்ரையான்ஸ் போன்றவை அளிக்கப்படும்.
8. உறுப்பினர்களிடம் தேர்தல் குறித்த கடந்தகால நினைவுகளைப் பகிர்வதைச் சித்தரிக்கும் வகையிலான படங்கள் அல்லது ஒரு சிறுகதையை எழுதச் சொல்ல வேண்டும்.
9. இறுதியாக, கிடைக்கப்பெற்ற கதை / வரைபடங்கள், சுவர் பத்திரிக்கையாகப் பொது மக்களுக்காக காட்சிப்படுத்தப்படும்.
10. **செயல்பாடு 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்** : ஒருங்கிணைப்பாளர் தேர்தல் பள்ளியிலுள்ள உறுப்பினர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:–
    - இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
    - மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
    - எந்த **ஒரு** செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)
11. வர்ணவாலி (varnawali) என்ற விளையாட்டு விளையாடும் முறையினை விளக்கி இதில் உறுப்பினர்கள் அனைவரையும் பங்குபெறச் செய்வதன் மூலம் இக்கூட்ட அமர்வு நிறைவுபெறும்.



## செயல்பாடு: CHUNAV YANTR (மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) மற்றும் வாக்குச் சாவடி தயார் செய்தல்

### கண்ணோட்டம்:

உறுப்பினர்களை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்**(EVM)** மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி**(VVPAT)** ஆகியவற்றைப் பயன்படுத்துதல் குறித்து நன்கு பயிற்சி பெற வேண்டும் என்பதே இச்செயல்பாட்டின் நோக்கமாகும். இச்செயல்பாட்டின் மூலம், மாற்று வேட்பாளர்கள், அவர்களின் சின்னங்கள் மற்றும் நோட்டா உள்ளடங்கிய தங்களது சொந்த வாக்குச் சீட்டினை உறுப்பினர்கள் உருவாக்குவர்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்**(EVM)** என்றால் என்ன ? வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி**(VVPAT)**யின் பங்குபணி யாது ?

ii) வாக்குச் சீட்டு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பெயர்கள் எவ்வாறு வாக்களிப்போருக்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பது குறித்து அறிதல்.

iii) தேர்தல் நடைமுறையில் நேர்மைத்தன்மை குறித்து அறிதல்.

iv) நோட்டா, வாக்குப் பதிவு சாதனத்தில் உள்ள கடைசி தெரிவாகும் என்பதை அறிதல்.

v) பாராளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடையேயான வேறுபாடுகள் குறித்து அறிதல்.

### தகவல் தொகுப்பு

i) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்**(EVM)** என்றால் என்ன ? வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி**(VVPAT)** குறித்த திரைப்படம்

ii) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த கையேடுகள்

iii) மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்**(EVM)** மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி**(VVPAT)**

iv) வாக்குச் சீட்டு குறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களிலிருந்து எடுக்கப்பட்ட சாராம்சக் குறிப்புகள்

### தேவைப்படும் பொருட்கள்


i) திரை, படக்காட்சி இயந்திரம், மடிக்கணினி மற்றும் ஒலிபெருக்கிகள்

ii) எழுதுகோல் / பென்சில்



• எந்த **ஒரு** செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)

13. ஒருங்கிணைப்பாளர் கண்ணாமூச்சு (Khojo Toh Janey (find out then)) என்ற விளையாட்டு விளையாடும் முறையினை விளக்கிய நிலையில் உறுப்பினர்கள் அனைவரும் இவ்விளையாட்டில் பங்கேற்க ஊக்குவிப்பதோடு இவ்வமர்வு நிறைவு பெறும்.



- 14லிருந்து 17 வயதுடைய பிற உறுப்பினர்கள் அனைவருக்கும் படிவம் 6 இன் ஒரு நகலை ஒருங்கிணைப்பாளர் வழங்குவார்.

6. ஒருங்கிணைப்பாளர் பிழையான விவரங்கள் உள்ள உறுப்பினர்களிடம், படிவம் 8–ஐப் பூர்த்தி செய்வதன் வாயிலாக அவர்கள் எவ்வாறு அப்பிழைகளை சரிசெய்ய இயலும் என்பதை விளக்குவார். அவர் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவார்.

7. மற்ற அனைத்து உறுப்பினர்களும், தங்கள் பெயரைப் பதிவு செய்வதற்காக படிவம் 6–ஐ எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்கான அறிவுறுத்தல்களை ஒருங்கிணைப்பாளர் தொடர்ந்து அளிப்பார். இது 18 வயதிற்குக் குறைவான இளம் உறுப்பினர்களுக்கான நடைமுறைப் பயிற்சியாக அமையும்.

8. படிவத்தில் எவ்வித பிழைகளும் இல்லாமல் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு, படிவத்தைச் சரியாகப் பூர்த்தி செய்யாத நபர்களுக்கு உதவும் பணி வழங்கப்படும்.

9. அனைத்து படிவங்களும் பூர்த்தி செய்த பின்னர், ஒருங்கிணைப்பாளர் 18 வயதிற்கு மேற்பட்ட உறுப்பினர்களின் படிவங்களையும் சேகரிப்பார். பின்னர் அவற்றை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் ஒப்படைப்பார். 14லிருந்து 17 வயதிற்குட்பட்ட உறுப்பினர்களின் படிவங்களை ஒருங்கிணைப்பாளர் மதிப்பாய்வு செய்வார்.

10. படிவங்களைச் சேகரித்த பின்னர், உறுப்பினர்கள் தெரிந்து கொள்வதற்காக, வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பங்கினைக் குறித்தும், பதிவு செய்யும் நடைமுறையின் போது ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்வதற்காகவும், உதவிக்காகவும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலரைத் தொடர்பு கொள்வதற்காக ஒருங்கிணைப்பாளர் வலியுறுத்துவார். மேற்கூறிய விவரங்களைக் கரும்பலகையில் இருந்து அறிந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வலியுறுத்துவார்.

11. ஒருங்கிணைப்பாளர், ஒவ்வொரு உறுப்பினரையும் அவர்களது சமூக உறுப்பினர்களின் பெயரை வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர்களைச் சரிபார்த்து அறிந்து கொள்ளவும் அல்லது அவர்கள் ஏற்கனவே பதிவு செய்யவில்லையெனில் பதிவு செய்யுமாறும் உற்சாகமூட்டும்படி ஊக்குவிப்பார்.

12. **செயல்பாடு 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்** : ஒருங்கிணைப்பாளர் தேர்தல் பள்ளியிலுள்ள உறுப்பினர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:–

    - இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
    - மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்





iii) பசை

iv) 15 வெற்று ஒட்டு காகிதச் சீட்டுகள்(Blank stick on paper clips)

iv) சின்னங்களுடன் கூடிய 15 வெற்று ஒட்டு காகிதச் சீட்டுகள்

vi) 1 நோட்டா ஒட்டு காகிதச் சீட்டு

## ஆயத்தமாதல்

தகவல் தொகுப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின் சாராம்சங்களை ஒருங்கிணைப்பாளர் கற்க வேண்டும்.

## செயல்முறை

1. ஒருங்கிணைப்பாளர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்**(EVM)** மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி**(VVPAT)**குறித்த திரைப்படத்தைத் திரையிடுவார்.

2. படம் திரையிட்ட பின்னர், அவர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்துவது குறித்து உறுப்பினர்களிடத்தில் ஏதேனும் வினாக்களை அல்லது ஐயப்பாடுகளை எழுப்புவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

3. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்த படத்தை திரையிட்ட பிறகு உறுப்பினர்கள் அவர்களாகவே வாக்குச் சீட்டுகளைத் தயாரித்துக் கொள்ளுமாறும், தேர்தல் நடைபெறும் மாநிலத்தின் குடிமக்களாகத் தங்களைக் கற்பனை செய்துகொள்ளுமாறும் உறுப்பினர்களை ஒருங்கிணைப்பாளர் ஊக்குவித்தல் வேண்டும்.

4. ஒருங்கிணைப்பாளர் தேர்தல் கல்வியறிவுக் குழு அமைக்கப்பட்டுள்ள பகுதியின் சட்டமன்றத் தொகுதியைத் தெரிந்திருக்க வேண்டும். அவர், சிறிய விவாதங்களில் உறுப்பினர்களை ஈடுபடுத்தி பின்வரும் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

    - சட்டமன்றத் தேர்தல் என்றால் என்ன ? எவ்வாறு அவை பாராளுமன்றத் தேர்தல்களிலிருந்து மாறுபடுகின்றன ?
    - தொகுதி என்றால் என்ன ?
    - சட்டமன்றத் தொகுதி என்றால் என்ன ? அவை பாராளுமன்றத் தொகுதி அல்லது வார்டு (கிராமப் பஞ்சாயத்து தேர்தல்களுக்கான தொகுதி ) ஆகியவை போன்றதா ?
    - ஒரு வாக்காளர் சட்டமன்றத் தேர்தல்களுக்காக, சட்டமன்றத் தொகுதி அல்லது பாராளுமன்றத் தொகுதி பற்றி தெரிந்திருக்க வேண்டுமா ?

5. விவாதத்திற்குப் பின்னர், தேர்தல் கல்வியறிவுக் குழு அமைந்துள்ள சட்டமன்றத் தொகுதிக்கான வேட்பாளர்களாக நடிப்பதற்கு முன்வரும் 15 உறுப்பினர்களை அழைக்கவும்.

6. அரசியல் சின்னங்களின் பட்டியலை, உறுப்பினர்களிடம் அளிக்க வேண்டும். அதில் 5 சின்னங்கள் தேசியக் கட்சிகளையும், 4 சின்னங்கள் அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளையும் குறிக்கும். ஏனைய 3 சின்னங்கள் பதிவு பெற்ற, ஆனால் அங்கீகாரமற்ற மாநிலக் கட்சிகளையும்





மேலும் 3 சின்னங்கள் சுயேட்சை வேட்பாளர்களையும் குறிக்கும். (சின்னங்களின் பட்டியல் (பக்கம் 73ல் வழங்கப்பட்டுள்ளன).

7. தோராயமான முறையில், 15 தன்னார்வலர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சின்னம் ஒதுக்கவும்.

8. வாக்குச்சீட்டில் தேசியக் கட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளின் வேட்பாளர்கள் பெயர்கள் முதலில் இடம் பெறும் என்றும், அதனைத் தொடர்ந்து பதிவு பெற்ற ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்களின் பெயர்களுடன் கடைசியில் சுயேட்சை வேட்பாளர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டில் இடம்பெறும் என்றும் வகுப்பு முழுவதற்கும் விளக்குதல்.

9. மேற்கூறிய மூன்று வகைகளுக்குள் உள்ள வேட்பாளர்களின் பெயர்கள் அகர வரிசையில் நாடாளுமன்றத் தேர்தல்கள் குறித்த நேர்வில், தேவநாகரி வரி வடிவிலும், மாநில சட்டமன்றத் தேர்தல்கள் குறித்த நேர்வில் மாநிலத்தின் ஆட்சி மொழி வடிவிலும் எழுதப்படும்.

10. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்திற்கான வாக்குச்சீட்டினை தயாரிப்பது குறித்து உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களிடம் அறிவிப்பு செய்தல் வேண்டும். ஒரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் ஒரே நேரத்தில் 16 விருப்புரிமைகள் இருக்கும். இறுதி விருப்புரிமையாக எப்பொழுதும் நோட்டா (NOTA) இடம் பெறும் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

11. 15 தன்னார்வலர்கள் ஒவ்வொருவரிடமும் வெற்றுத்தாள் சீட்டினை வழங்கி, அதில் அவர்களின் பெயரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதுமாறு கோருதல்.

12. இதனிடையே, எஞ்சியுள்ள உறுப்பினர்களிடம் வாக்குச்சீட்டின் தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்ட மாதிரியின்படி, சின்னம் மற்றும் வேட்பாளர்களின் பெயர்களுக்கு வெறுமையாக இடம் அளித்து, வரிசைகள் மற்றும் நெடுவரிசையுடன் கூடிய வாக்குச்சீட்டினை தயாரிக்குமாறு கோருதல். விவரிக்கப்பட்டவாறு, வரிசை / நெடுவரிசையின் இறுதியில் NOTA இடம்பெறலாம்.

13. அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுக்கான சின்னங்களைக் கொண்டிருக்கும் தன்னார்வலர்களை அழைத்து, அவர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டில் அகரவரிசைப்படி இடம் பெறும் என்று விளக்குதல். ஒருங்கிணைப்பாளர் வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் பட்டியலை பட்டியலிடுவதற்கான வழிகாட்டிக் குறிப்புகளை வாசிப்பதற்கு உறுப்பினர்களுக்கு உதவுவதுடன், தன்னார்வலர்களுக்கு உதவி செய்வார்.

14. தன்னார்வலர்கள் அவர்களின் பெயர்களை மாற்று (Dummy) வாக்குச்சீட்டில் எழுதி அதனுடன் அவர்களின் பெயர்களுக்கு எதிரே அவர்களது கட்சியின் சின்னத்துடன் கூடிய வாக்குச்சீட்டினை ஒட்டுதல்.

15. இதே முறை அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளர்களுக்கும், இறுதியில் சுயேட்சை வேட்பாளர்களுக்கும் பின்பற்றப்பட வேண்டும் .

16. இப்போது வாக்குச்சீட்டு தயார் நிலையில் உள்ளது.





2. தேர்தல் பள்ளி அமைவிடத்தின் வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு கொள்வதற்கான விவரங்களையும், அவர்களின் அமைவிடத்தையும் கரும்பலகையில் எழுத வேண்டும்.

3. ஒருங்கிணைப்பாளர் உறுப்பினர்களை இரண்டு குழுக்களாக பிரிக்க வேண்டும். ஒரு குழுவில் 18 வயதிற்கு மேற்பட்ட உறுப்பினர்களும் மறு குழுவில் 14லிருந்து 17 வயதுடைய உறுப்பினர்களும் இருக்க வேண்டும். இரு குழுக்களில் உள்ளவர்களும் தனித்தனியாக அமராமல் சேர்ந்து அமர்ந்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

4. 'வாக்காளர் பட்டியல் என்றால் என்ன ?' என்ற வினாவை உறுப்பினர்களிடம் கேட்டு ஒருங்கிணைப்பாளர் கூட்டத்தொடரை தொடங்குவார். இந்த வினாவுடன் வாக்காளர் பட்டியல் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விரிவான விவாதத்துடன், கூட்டத்தொடர் தொடங்கப்படும்.

### ஒருங்கிணைப்பாளர் செய்ய வேண்டியவை:

- மாதிரி தேர்தல் என்ற செயல்பாட்டில் வாக்களிப்பதற்கு முன்னர், மாதிரி வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயரை எங்கு பதிவு செய்தனர் என்பன போன்ற தேர்தல் நிகழ்வுகளை நினைவுகூருமாறு வலியுறுத்தப்படுகின்றனர்.
- வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள குடிமக்கள் அனைவரின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர்கள் இருப்பது முக்கியமானது என்றும் இல்லையேல் அவர்கள் வாக்களிக்க இயலாது என்றும் உறுப்பினர்களிடம் கூற வேண்டும்.
- வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு படிவம் 6ஐ அவர்கள் பூர்த்தி செய்திருப்பின், தேர்தலுக்கு முன் வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர் மற்றும் விவரங்களை சரிப்பார்ப்பது இன்றியமையாததாகும் என்பதை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கவும் வேண்டும்.

5. ஒருங்கிணைப்பாளர் அவ்வமைவிடத்தின் வாக்காளர் பட்டியலைக் கொண்டு வந்து, 18 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து வாக்காளர் பட்டியலில் அவர்களையும் அவர்களைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களின் பெயர் மற்றும் விவரங்களையும் சரிபார்க்குமாறு தெரிவிப்பார்.

- வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாத தகுதியுடைய உறுப்பினர்கள் அனைவரும் பதிவு பெறாததால், படிவம் 6 இன் ஒரு நகலை ஒருங்கிணைப்பாளர் வழங்குவார்.
- வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் உள்ள பிழைகளை திருத்துவதற்கு தகுதியுடைய உறுப்பினர்கள் அனைவருக்கும் படிவம் 6 இன் ஒரு நகலை ஒருங்கிணைப்பாளர் வழங்குவார்.





செயல்பாடு : வாருங்கள் பதிவு செய்யலாம் (Aao Panjikaran Karein) - இதனைத் தொடர்ந்து விளையாட்டு.

### கண்ணோட்டம்

இச்செயல்பாடானது, வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர்களைச் சரிபார்ப்பதற்கு ஊக்குவிப்பதோடு, பதிவு பெறாத தகுதியுடைய வாக்காளர்களுக்கு, படிவம் 6 ஐ பூர்த்தி செய்து வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்ப்பதற்காக வழிகாட்டுகிறது.

**பங்கேற்பாளர்கள்:** 14 மற்றும் அதற்கு மேல் வயதுடைய அனைவரும்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. வாக்காளர் பட்டியலில் பெயரைச் சரிபார்த்தல்

ii. வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைச் சரிபார்த்தல்

iii. படிவம் 6 ஐ பூர்த்தி செய்வது எவ்வாறு ?

iv. ஏனையவர்களைப் பதிவு செய்வதற்கு ஊக்குவித்தல்

### தகவல் தொகுப்பு:

i. அமைவிடத்தின் வாக்காளர் பட்டியல்

ii. படிவம் 6 இன் நகல்கள் ( தேர்தல் பள்ளி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குச்சாவடி நிலை அலுவலரால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். )

iii. படிவம் 8 இன் சில நகல்கள் ( வாக்குச்சாவடி நிலை அலுவலரால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் )

iv. **வாக்காளர் பதிவு அலுவலரின்** (Electoral Registration Officer(ERO)) **விவரங்கள்**

**குறிப்பு:** இச்செயல்பாட்டிற்கு வாக்குச்சாவடி அளவிலான அலுவலரின் வருகைப்பதிவு இன்றியமையாததாகும்.

### பொருட்கள்:

எழுதுகோல் மற்றும் தாள்

### முறை:

1. அங்கு வருகைபுரிந்த அனைவரும் தேர்தல் பள்ளியின் பாடலைச் சேர்ந்து (Chunav pathshala song) பாடி கூட்டத்தொடரைத் தொடங்க வேண்டும். உறுப்பினர்கள் அனைவரின் வசதிக்காக அந்தப் பாடல் கரும்பலகையில் எழுதப்பட வேண்டும்.





17. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில், அதே முறையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் உள்ளது என ஒருங்கிணைப்பாளர் உறுப்பினர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

18. வேட்பாளரின் பெயர் மற்றும் புகைப்படத்தை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் காட்சிப்படுத்துவதற்கு ஒருங்கிணைப்பாளர் முக்கியத்துவம் அளித்தல். வாக்காளர்கள், அவர்களின் வாக்களிப்பினை முடிவு செய்வதற்காக வேட்பாளர்கள், அவர்களின் முந்தைய திட்டங்கள், செயல்கள் மற்றும் கட்சித் தேர்தல் அறிக்கைகள் போன்றவை குறித்த தெளிவான அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

19. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்:** தனி நபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப் படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமர்ந்துள்ள உறுப்பினர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
- மனதில் வைத்து கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
- எந்த **ஒரு** செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)

### ஒருங்கிணைப்பாளருக்கான குறிப்பு

- செயல்பாட்டின் நிறைவிற்குப் பின்னர், தங்களுடைய வாக்குச்சீட்டினை உறுப்பினர்களே தயாரித்ததற்காக ஒருங்கிணைப்பாளர் மொத்த வகுப்பினையும் அவர்களே பாராட்டிக் கொள்ளுமாறு கூற வேண்டும். பின்னர் வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் பெயர்களைப் பட்டியலிடுவது நடுநிலையான வழியில் நடைபெற்றது என்பதையும், பட்டியலின் வரிசை வேட்பாளரின் தகுதியைச் சுட்டிக்காட்டாது என்பதையும் ஒருங்கிணைப்பாளர் மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வார். எனவே, அனைவரும் அவர்களின் வேட்பாளர்களை அறிந்து வைத்திருப்பதுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் அவர்களின் வரிசையைப் பொருட்படுத்தாமல் அவர்கள் விரும்பும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் கடைசி விருப்புரிமையாக நோட்டா (NOTA) உள்ளது என்பதை ஒருங்கிணைப்பாளர் எடுத்துரைக்க வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் வாக்குப்பதிவு கருவியிலிருக்கும் 16 விருப்புரிமைகளில், இறுதி விருப்புரிமை எப்பொழுதும் நோட்டா (NOTA) இருக்கும். 16 வேட்பாளர்கள் இருக்கும் நேர்வில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் மற்றொரு இயந்திரம் இணைக்கப்பட்டு அதனுடன் நோட்டா விருப்புரிமை சேர்க்கப்படும்.
- உயரளவாக, 4 வாக்குப்பதிவு கருவிகள் ஒன்றாக இணைக்கப்படலாம், இதனால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 64 (16X4) (63 வேட்பாளர்கள் + நோட்டா) விருப்புரிமைகளைக் கொண்டிருக்கும். ஒரு தொகுதியில் 64–க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், வாக்குப்பதிவிற்கு மரபு வழியிலான வாக்குச்சீட்டுகளும் வாக்குப்பதிவு பெட்டியும் பயன்படுத்தப்படும் என்ற தகவலை ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பார்.

## செயல்பாடு 8: நோட்டா குறித்து அறிந்து கொள்ளுங்கள் (NOTA ko Janey)

### கண்ணோட்டம்

நோட்டா குறித்து கற்பவர்களுக்கு பயிற்றுவிக்கும் நோக்கத்தில் ஒருங்கிணைப்பாளருடன் எத்தனை பேர் வேண்டுமானாலும் பங்கேற்கின்ற விளையாட்டு விளையாடப்படும். நோட்டாவிற்கு வாக்களிப்பது என்பது உங்களது வாக்குகள் வீணடிக்கப்படுகிறது எனப் பொருளல்ல. உங்களுக்கு எது வேண்டும் என அறிவது எவ்வளவு அவசியமானதோ அது போன்று உங்களுக்கு எது தேவையில்லை என்பதை அறிவதும் அவசியமானதாகும்.

**பங்கேற்பாளர்கள்:** தேர்தல் பள்ளியின் அனைத்து உறுப்பினர்கள்

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. நோட்டா குறித்து அறிதல்.


ii. ஒவ்வொரு வாக்கும் எண்ணப்பட வேண்டும் – நோட்டாவாக இருப்பினும் என்பதை உணர்தல்

### தகவல் தொகுப்பு:

i. ஒளிரும் அட்டைகள் ( 4 எண்ணிக்கை ) – ( தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது )

**கால அளவு:** 15 நிமிடங்கள்

**விளையாட்டின் முன்மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது**




ஒரு செடியை நடும் பொருட்டு குழி தோண்டுவதற்கு மேற்கண்டவற்றுள் எது பயன்படும் ?

### முறை:

1. ஏற்பாட்டாளர் ஒளிரும் அட்டைகளை பள்ளி உறுப்பினர்களிடம் காண்பிக்க வேண்டும். இவ்வட்டையில் ஒரு கேள்வி மற்றும் 4 விதமான பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இதில் 3 பதில்கள் வேடிக்கையானதாகவும், அபத்தமானதாகவும் இருக்கும். இறுதியாக “நோட்டா” அல்லது ‘இவர்களில் எவரும் இல்லை’ என்ற பதில் இருக்கும். சரியான பதிலைத் தேர்ந்தெடுக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.



2. இப்பயிற்சியின் மூலம் உறுப்பினர்கள் ஒவ்வொரு முறையும் வேறு வாய்ப்பின்றி சரியான விடையான நோட்டாவை தேர்வு செய்வர். ஒவ்வொரு நிலை முன்னேறும் போதும் அறிவுக்கு ஒவ்வாதவற்றின் அளவு கூடிக்கொண்டே இருக்கும்.
3. விளையாட்டில் 4லிருந்து 5 சுற்றுகள் முடிந்தவுடன், ஏற்பாட்டாளர் ‘நோட்டா’ குறித்து விளக்கி இத்தெரிவு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் எப்பொழுது சேர்க்கப்பட்டது என்பதைக் கூற வேண்டும்.
4. இதன் பிறகு ஒருங்கிணைப்பாளர் இறுதி வினாவிற்கு வருவார். இக்கேள்வி அவரால் கேட்கப்படும்–‘நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள் ?’
   a) தனக்கு சாதகமாக வாக்களிக்க கையூட்டு வழங்கும் ஊழல் வேட்பாளர்
   b) திறமையற்ற சோம்பேறித்தனமான வேட்பாளர்
   c) குற்றச்சாட்டுகள் உள்ள வேட்பாளர்
   d) இவர்களில் எவருமில்லை (நோட்டா)
5. பிறகு குழு உரையாடல் / விவாதம் நடைபெறும். ஒருங்கிணைப்பாளர் உறுப்பினர்களைக் குழுவாகப் பிரியவும் விவரங்களைத் தயார் செய்யவும் 15 நிமிடங்கள் கொடுப்பார். குழு கலந்துரையாடல் / விவாதம் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களைப் பற்றியதாக இருக்கும்.
   - உங்கள் வாழ்க்கையில் தினசரி எடுக்கும் முடிவிற்கு நோட்டா விருப்பத்தை வைத்துக் கொள்ள எண்ணுகிறீர்களா ?
   - நமக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்து கொள்வதைப் போல், என்ன தேவை இல்லை என்பதைத் தெரிந்து கொள்வதும் முக்கியமானது என்ற செய்தியைத் அறிந்து கொள்ளுதல்.
   - நீங்கள் ஏன் நோட்டாவை முக்கியமானதாகக் கருதுகிறீர்கள் ?
6. நோட்டா என்பது வாக்காளர்களுக்கான முக்கிய வாய்ப்பு என்பதையும், நோட்டாவுக்கு வாக்களிக்கும்போது, அது, களத்தில் உள்ள வேட்பாளரை, மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதையும், அதன்மூலம் அரசியல் கட்சியினர் அடுத்த தேர்தல்களில் வேறு தகுதியான வேட்பாளரை நிறுத்த வழிவகை ஏற்படும் என்பதை ஒருங்கிணைப்பாளர் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

**7. 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல் :** அனைத்து செயல்பாடுகளும் தனிநபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு நினைவூட்டல் முறையில் பின்பற்றப்பட வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் தேர்தல் பள்ளியில் உள்ள உறுப்பினர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:–

– இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்

– மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்

– எந்த **ஒரு** செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (உறுப்பினர்கள், குழு செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)

